1/203

2
207

...லியாரால்

சரஸ்வதி மஹால்
திருவாவடுதுறை ஆதீனம்

1337

உ

வேலுமயிலுந்துணை.

தெய்வத்தன்மை பொருந்திய கடைச்சங்கத்துத்

தமிழ்த் தலைமைப்புலவராகிய

கணக்காயனார் மகனார்

நக்கீரனார் அருளிச்செய்த

# திருமுருகாற்றுப்படைக்கு

## உரையாளர் பரிமேலழகருரை.

மஹால்
திருவாவடுதுறை ஆதீன

இது

வாடாலூர் - இரத்தினவேலு முதலியாரால்

சென்னைச்சர்வகலாசாலைத்

தமிழ்த்தலைமைப்புலமை நடாத்திய

இயற்றமிழாசிரியர்

கோமளபுரம்-இராசகோபால பிள்ளை

அவர்கள் மாணாக்கர்

தி-சண்முக பிள்ளையைக்கொண்டு

பரிசோதிப்பித்துச்

சென்னை

ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பார்த்திப ௵ மேடரவி.

# விளம்பரம்.

இப்புத்தகம் வேண்வோர் சென்னை அண்ணாப்பிள்ளைதெருவில் (67) வது கதவிலக்கமுள்ள வீட்டில் ஸ்தாபித்துள்ள ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்தில் விலை அணா (2) கொடுத்து வாங்கிக்கொள்ளலாம்.

இப்படிக்கு.

☞ வா - இரத்தினவேலுமுதலியார்.

உ

வேலுமயிலுந்துணை.

# திருமுருகாற்றுப்படை.

## இணைக்குறளாசிரியப்பா.

### முதலாவது,

### திருப்பரங்குன்றம்.

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்
கோவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
யுறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூன் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்ளுறை சிதறித்
தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்
திருள்படப் பொதுளிய பராரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோட்
கோபத் தன்ன தோயாப் பூந்துகிற்
பல்காசு நிரைத்த சில்கா ழல்குற்
கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பி
னாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்
சேணிகந்து விளங்குஞ் செயிர்தீர் மேனித்
துணையோ ராய்ந்த விணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறிதழிடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்

தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதன்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்
டுளைப்பூ மருதி னொள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்
பிணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை
மந்தியு மறியா மரம்பயி லடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள் புக்குச்
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவே
லுலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்

உருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்
குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்டொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
யொண்டொடித் தடக்கையி னேந்தி வெருவர.
வென்றடு விறற்களம் பாடித்தோள் பெயரா
நிணந்தின் வாய டுணங்கை தூங்க .
விருபே ருருவி னொருபே ரியாக்கை
யறுவே றுவகையி னஞ்சுவர மண்டி
யவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுத றடிந்த மறுவில் கொற்றத்
தெய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுட
னன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
வின்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயிற்
றிருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயி
னிருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்
கண்போன் மலர்ந்த காமர் சுனைமலர்
ரஞ்சிறை வண்டி னரிக்கண மொலிக்குங்
குன்றமர்ந் துறைதலு முரியன தாஅன்று.

## திருப்பரங்குன்றம்.

"உலகமுவப்ப-மலைகிழவோனே" எனமுதலையு முடிவை
யுஞ்சொல்ல ஒருமைபெற்ற வுள்ளத்துடனே யொருகாற்பாட்
டோதிய தெனக்கொள்க. உலக முவப்ப - உலகமென்பது
யர்ந்தோர் மாட்டாதலானும் உயர்ந்தோராயுள்ள பரமவிரு
டிகளா யுள்ளோர் விரும்ப வுயர்ந்தோர் விரும்பவெனினும
மையும். வலனேர்புதிரிதரு - வலமாகத் திரிந்தருளுகின்ற;
ஒன்றைக்குறித்து வலம்வரவேண்டுதலால் அது மகாமேரு
வெனக்கொள்க. இதுவன்றி வெற்றியாலெழுந்து திரிதரு
கின்ற தென்பாருமுளர், அது பொருந்தாமையறிக. அஃ
தென்னையெனின் இம்மகமேருபூமிக்கு நடுவாதலானும்; இந்
நுச்சியிற் பரமேச்சுர னெழுந்தருளி யிருத்தலானு மெனக்
கொள்க. இஃதன்றிப் பூமியை வலமாக வெனினுமமையும்.
பலர் புகழ்ஞாயிறு கடற்கண்டாங்கு = எல்லாச் சமையத்தா
ராலுங் கொண்டாடப்பட்ட ஆதித்தனைக் கடலிற்கண்டாற்
போல; என்றதனால் உவமை, ஆதித்தனுதிக்கின்றபொழுதிற்
செம்மையும், கடலிற் பசுமையும், பிள்ளையார் திருமேனியினை
யும் மயில் நிறத்தினையுங் காட்டிற்று எனக்கொள்க.
ஓவறவிமைக்குஞ் சேண்விளங்கவிரொளி=ஓவற - ஒழிவற,
இமைக்கும்-விட்டுவிளங்கும், சேண்-தூரம், விளங்குதல்-தோ
ற்றம், அவிர் - பாடஞ்செய்தல், ஒளி - நிறம், ஆகவே அதிதூர
த்திலே தோன்றி ஒளிவிட்டு விளங்கிப் பாடஞ்செய்கிற திரு
நிறத்தினையுமுடையனுமாய்-எனக்கூட்டுக; இதுவன்றி இமை
த்தல் நிறைதல்விட்டு விளங்குமென்பாருமுளர். உறுநர்த்
தாங்கிய மதனுடைநோன்றாள் = உறுநர்- மெய்யடியர், தா
ங்குதல் - காத்தல், மதனுடை - அழகுடைய, நோன்றாள்-
வலியதாளாகிய சீபாதம்; எனவே மெய்யடியரைக்காக்கின்ற
வலியினையுடைத்தான சீபாதத்தை யுடையனுமாய்; செறு
நர்த்தேய்த்த செல்லுறழ்தடக்கை=செறுநர் - சத்துருக்கள்,

தேய்த்த - கெடுத்த, செல் - மேகம், உறழ்தல் - ஒத்தல், தடக்கை - பெரியகை எனவே - சத்துருக்களைக்கெடுத்து மேகத்தினது செய்தியை யுடைத்தாய பெரியகைகளை யுடையனுமாய், மறுவில்கற்பின்வாணுதல் கணவன் = மறுவில் - குற்றமில்லாத, கற்பின் - பதிவிரதாபாவத்தினையுடைய, வாள் - ஒளி, நுதல்-நெற்றி, கணவன் - கொழுநன், எனவே குற்றமில்லாத பதிவிரதாபாவத்தினையும் ஒளிதருநெற்றியினையுமுடைய தெய்வயானைக்குக்கொழுநனுமாய்; கார்கோண் முகந்த கமஞ் சூன் மாமழை = கார்கோள் - கறுத்தமேகமானது, முகத்தல்-முகந்தல் ஆதலாற் கார்கோளென்று கடலுக்குப் பெயராயிற்று; கமஞ்சூன் மாமழை = கமம் - முதிர்ச்சி, சூல் = கரு, மாமழை-பெரியமழை எனவேகடலில் முகந்து முதிர்ந்த கருக்கொண்ட மேகங்களானவைபெரிய மழைகளை; வாள்போழ் விசும்பின் வள்ளுறைசிதறி = வாள் - ஒளி, போழ்தல் கூறிடுதல் விசும்பின் - ஆகாயத்தில், வள்ளுறை - வளப்பத்தையுடைய துளிகளை, சிதறி - தூவி, எனவே சந்திராதித்தர்களாலே யளவிடப்பட்டாற்போன்ற விசும்பினிடத்தில் நின்று மேகமானது வளப்பமுடைய பெரியமழைகளைத்தூவி, தலைப்பெயல் தலைஇய தண்ணறுங்கானத்து = தலைப்பெயல் - முதற்பெய்தமழை, தலைஇய - பெய்த, தண்ணறுங்கானத்து - குளிர்ச்சியையும் நறுநாற்றத்தினையுமுடைய காட்டிடத்து எனவே முதற்பெய்த நீர் நிலத்துக்குளிர்ந்த நறுநாற்றத்தினையுடைய பொழிலிடத்து, இதுவன்றி தலைஇய எனற்குத் தழைத்தவெனினுமமையும்; இருள்படப் பொதுளிய பராஅரை மராஅத்து = இருள்பட-இருளுண்டாக, பொதுளிய - நெருங்கிய, பராரை பருத்த அரை, மராஅத்து - கடம்பு எனவே இருளுண்டாய நெருங்கிப் பெருத்த அரையினையுடைய மரமாகிய கடம்பின்; உருள்பூந்தண்டார் புரளுமார்பினன் = உருள்பூ-தேருருள்போன்றவட்டப்பூ, தண்டார்-தட்பமுடைத்தாய திருமாலை, புரளுமார்பினன் - அசைதருகின்ற மார்பினையுடையவன் எனவே வட்டப்பூவாற் சமைந்து தட்பமுடைத்தாய திருமாலை

யசைதருகிற மார்பினையுடையனுமாய், மால்வரை நிவந்த சேணுயர் வெற்பின்=மால் - பெருமை, வரை - மலை, நிவந்த-பரந்த சேணுயர்-ஆகாசத்திலோங்கிய, வெற்பில்-வரையிடத்து எனவே பெரியமலைகளினாலேபார்க்கப்பட்டு ஆகாயத்திலோங்கிய மலையிடத்து, கிண்கிணிகவைஇய - ஒண்செஞ்சீறடி = கிண்கிணி - சிறுசதங்கை, கவைஇய - கட்டின, ஒள் - அழகு, செம் - சிறப்பு, சீறடி - சிறுத்தவடி எனவே சிறுசதங்கைகளாலே கட்டப்பட்டு அழகினையும் சிறப்பினையுமுடைத்தாய சிறியவடியினையுடையராய், கணைக்கால், வாங்கியநுசுப்பிற்பணைத்தோள்=கணைக்கால் - கணைக்கால், வாங்கிய - சுருங்கிய, நுசுப்பின் இடையையும், பணைத்தோள்-வேய்போன்ற தோளினையுமுடையராய், கோபத்தன்ன தோயாப்பூந்துகில்=கோபத்தன்ன - இந்திரகோபம்போன்ற, தோயாப் பூந்துகில் தற்சுபாவமானதானையும், பல்காசுநிரைத்த சில்காழல்குல்=பல்காசு - பலமணி, நிரைத்த - நிரைக்கப்பட்ட சில்காழ் - மேகலை, அல்குல் - நிதம்பம் எனவே பலமணி நிரைக்கப்பட்ட சிற்பத்தொழிலமைந்த மேகலை புனைந்த நிதம்பத்தையும் உடையராய்; இதற்கு பல்காசுநிறைத்த சில்காழல்குலெனப்பாடங்கொண்டு பலமணிகள் நிறைக்கப்பட்டு மாறுபடச்சேர்த்த சிற்பத்தொழில் பொருந்திய அரைப்பட்டிகையு மமர்ந்த அரையினையு முடையராய் என்பாருமுளர். கைபுனைந்தியற்றாக் கவின்பெறுவனப்பின் - கைபுனைந்தியற்றா - கையாலியற்றமுடியாத, கவின்-அழகு, பெறு - பெற்ற, வனப்பு - இளமை நிறம் எனவே கையாலியற்ற முடியாத அழகுபெற்ற இளமைநிறத்தினையுமுடையராய், நாவலொடு பெயரிய பொலம்புனையவிரிழை=நாவற்பழத்துச் சாறுபட்டுப் பேதமானபொன்னாற் செய்யப்பட்ட விளக்கமான ஆபரணங்களையுமுடையருமாய், சேணிகந்து விளங்குஞ்செயிர்தீர்மேனி=சேண் - தூரம், இகத்தல் - கடத்தல், விளங்கும்-விட்டு விளங்கும், செயிர் - குற்றம், தீர் - தீர்ந்த, மேனி-உடம்பு, எனவே அதிதூரத்தைக் கடந்து விட்டு விளங்கிக்கு

ற்றந்தீர்ந்த உடம்பினையு முடையராய். துணையோராய்ந்த இணையீரோதிச் செங்கால்வெட்சிச் சிறிதழிடையிடுபு=துணையோர் - ஆயத்தார், ஆய்ந்த - வகிர்ந்து திருத்தின, இணை - கூட்டம், ஈரம் - குளிர்ச்சி, ஓதி - மயிர், செங்கால்வெட்சி - சிவந்ததாளினையுடைய வெட்சியின், சிறிதழிடையிடுபு -சிறிய இதழ்களை யிடையிட்டு எனவே ஆயத்தார்வகிர்ந்து திருத்தினகூட்டமுங் குளிர்ச்சியுமுடைய மயிரிலே வெட்சியின் சிறிய இதழ்களை யிடையிட்டு, பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளி=பைந்தாள் - பச்சென்ற தாளினையுடைய, குவளைத் தூஇதழ்கிள்ளி=நீலோற்பலத்தினது தூயஇதழ்களையுங் கிள்ளியிட்டு, தெய்வவுத்தியொடு வலம்புரிவயின்வைத்து=சீதேவியென்னுந்தலைக்கோலத்துடனே, வலம்புரி-நந்தியாவட்டம், வயின்வைத்து - இடையிடையே சொருகியென்பாருமுளர்: இதுவன்றி வலம்புரிச்சங்கின்றமுத்து, வயின்-இடம், தெய்வவுத்தியோடு வைத்து-அணிந்து எனவே சீதேவியென்னுந்தலைக்கோலத்துடனே சங்கின்றமுத்தின்மாலையையும் அவ்விடத்தணிந்து. திலதந்தைஇய தேங்கமழ் திருநுதல்=திலதம்-பொட்டு, தைஇய - ஊன்றின, தேங்கமழ் - நறுநாற்றங் கமழ்தல், திருநுதல் - சிறந்த நெற்றியிலே. மகரப்பகுவாய்தாழமண்ணுறுத்து=மகரம்-சுறவு, பகுவாய்-பெரியவாய், தாழ-சரிய, மண்ணுறுத்து-விளக்குறுத்தி எனவே பொட்டூன்றி நறுநாற்றங்கமழ்வதானநெற்றியையும் சுறவின்பெரியவாய் போற்சரிய விளக்குறுத்தி; இதுவன்றி சுறவின் பகுவாயுந் தாழும்படி தழுவி முறுக்கிவைத் தழகுபெற முடித்ததென்பாருமுளர். துவர முடித்ததுகளறு முச்சிபெருகமுடித்துச் சிம்பறக்கோதிபெருந்தண் சண்பகஞ்செரீஇ=பெருத்துக் குளிர்ந்த சண்பகப்பூவைச்சொருகி, கருந்தகட்டுளைப் பூமருதி னொள்ளிணரட்டி=கருந்தகடு, கரிய புறவிதழ், உளைப்பூ-விரிந்தபூ, மருதினொள்ளிணர்-மருதினழகிய பூங்கொத்து, அட்டி அப்பி, எனவே கரியபுறவிதழ் விரிந்த மருதினழகிய பூங்கொத்துகளைப் பரப்பி, கிளைக்கவின்றெழுதரு கீணீர்ச் செவ்வரும்பு=கிளைகவின்

றெழுதரு - கிளையை நெருங்கி யெழுகின்ற, கிணர்ச்செவ்வரு
ம்பு - நீர்க்கீழ் நிற்கும் அரும்பாகிய பூவினாலே, இணைப்புறு
பிணையல்=இணைக்கப்பட்டமாலை, வளைஇ கொண்டையிலே
வளையச்சுற்றி துணைத்தகவண்காது நிறைத்தபிண்டியொள்
தளிர்=துணைத்தக - ஒத்த; வண்காது - அழகியகாது, நிறை
ந்த-நிரம்பின, பிண்டி - அசோகு, ஒள்தளிர் - அழகியகாது
நுண்பூணாகந்திளைப்ப=நுண் - நுண்ணிய தொழில் புனைந்த,
பூண் - அணி, ஆகந்திளைப்ப - மார்பிலே கிடந்தசைதர; என
வே ஒத்த வழகிய காது நிரம்பின அசோகினதழகிய தளி
ரானது நுண்ணிய தொழில்புனைந்த அணிகள் மார்பிலே கிட
ந்தசைதர; திண்காழ் நறுங்குறடுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்
வை=திண் - செறிந்த, காழ்-வயிரம், நறுங்குறடு - நறுநாற்
றத்தையுடைய சந்தனக்குறடு, உரிஞ்சிய - தேய்த்த, பூங்கே
ழ்த்தேய்வை பொலிவினையுடைத்தாய குழம்பு எனவே செ
றிந்த வயிரம்பொருந்திய நறுநாற்றத்தையுடைய சந்தனக்
குறடு தேய்த்த குழம்பு, தேங்கமழ் மருதிணர்கடுப்ப=மண
ங்கமழ்கின்ற மருதப் பூங்கொத்தையொத்த சந்தனக்குழம்
பை, கோங்கின் குவிமுகிழிளமுலை கொட்டி = அரும்பிய
மொட்டுப்போன்ற விளமுலைகளிலே யப்பி, விரிமலர்வேங்
கை நுண்டாதப்பி = அதன்மேலேவிரிந்த வேங்கைப்பூவி
னுண்ணிய தாதுகளையப்பி, காண்வரவெள்ளிற் குறுமுறி
கிள்ளுபுதெறியா=காண்வர-காட்சிபெற, வெள்ளில் - விளா
குறுமுறி - சிறுதளிர், கிள்ளுபு - கிள்ளிநறுக்கி, தெறியா -
தெறித்து; எனவே காட்சிபெற விளாவினது சிறிய தளி
ரையாய்ந்து நறுக்கித்தெறித்து பிள்ளையார் சிபாதங்களையுள்
ளித்தெறித்து; கோழியோங்கிய-கோழி எழுந்துயர்ந்த, வெ
ன்றடு - வெற்றி மிகுந்த, விறல் - வீரம், கொடி - துவசம்,
வாழியபெரிதென் றேத்தி - வாழ்வதாகவென்று வாழ்த்தி
எனவே கோழியெழுந்துயர்ந்த வெற்றிமிகுந்த கொடிவாழ்வ

தாக வென்று வாழ்த்தி, பலவுடன் சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப்பாடி=பலவுடன் - பல தோத்திரங்களினாலே, சீர்திகழ் - அழகுபட்டு விளங்க, சிலம்பகம்-மலையிடம், சிலம்பப்பாடி - சத்திக்கப்பாடி எனவே பலதோத்திரங்களினாலே அழகுபட்டு விளங்கிய மலையிடம் ஆரவாரிக்கப்பாடி, சூரரமகளிராடுஞ் சோலை=சூரரமகளிர் - தெய்வமடவாராயுள்ளார், ஆடுஞ்சோலை-கூத்தாடுகின்றசோலை-எனவே தெய்வமடவாராயுள்ளார் கூத்தாடுகின்றசோலை, மந்தியுமறியா மரம்பயிலடுக்கத்து=மந்தியுமறியா அருக்கனுமறியாத; இதுவன்றியும் குரங்குகளுமறியாதென்பாருமுளர், மரம்பயில்-மரங்கள் நெருங்கிய அடுக்கத்து-சிலமலையிடத்து, சுரும்பு மூசாச்சுடர்ப்பூங்காந்தள்=சுரும்பு - வண்டு, மூசா - மொய்யா, சுடர்பூ-சிவந்தபூ, காந்தள் - காந்தளின் எனவே வண்டுமொய்யாத சிவந்தகாந்தட் பூவாற்றொடுத்த, பெருந்தண்கண்ணி மிலைந்தசென்னியன்=மிகவுங் குளிர்ந்த மாலைசூடின திருமுடியை யுடையனுமாய்; பார்முதிர் பனிக்கடல் கலங்கவுள்புக்கு=பார் - பூமி, முதிர் - சூழ்ந்த, பனிக்கடல்-குளிர்ச்சிபொருந்திய சமுத்திரம், கலங்க - கலங்கும்படி, உள்புக்கு - உள்புகுந்து எனவே பூமிசூழ்ந்த குளிர்ச்சிபொருந்திய சமுத்திரங் கலங்கும்படி யுள்புகுந்து; சூர்முதறடிந்த சுடரிலை நெடுவேல்=சூர்முதறடிந்த சூரபன்மாவை முதலுடனேகெடுத்த, சுடரிலை-ஒளிபொருந்தியகன்ற, நெடுவேல் - பெரியவேலானது எனவே சூரபன்மாவை முதலுடனே கெடுத்த பெரிய வேலானது. உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச் சுழல்விழிப் பசுங்கண்சூர்த்த நோக்கின்=உலறிய கதுப்பு-உலறியமயிர், பிறழ்பல் - தோன்றிய வெயிறு, பேழ்வாய் - பெரியவாய், சுழல்விழி - சுழன்றவிழி, பசுங்கண் - பச்சென்றகண், சூர்த்தம் நடுக்கம், நோக்கம் - பார்வை எனவே உலறியமயிரினையும், தோன்றிய வெயிற்றினையும் பெரியவாயினையும் சுழன்ற விழியினையும் பச்சென்ற கண்ணினையும் நடுங்கிய பார்வையினையு

முடைத்தாய், சுழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்க= சுழல்கண் - சுழன்று விழுவதுபோலுங் கண், கூகை - பேராந்தை, ஒடு - உடனே, கடும்பாம்பு தூங்க - கோபத்தையுடைய பாம்பு நால எனவே சுழன்று விழுவதுபோலும் கண்ணையுடைய பேராந்தையுடனே விடத்தாற் கோபத்தையுடைய பாம்பையு நால;பெருமுலையலைக்குங்காதில்=மிகநான்ற முலைகளிலே சென்றலைக்கின்ற காதிலே தூக்கிக்கொண்டு பிணர்மோட்டுருகெழுசெலவின்=பிணர் சர்ச்சரை, மோட்டு- உயர்ச்சி, உருகெழு - இருளுருப் பொருந்திய, செலவின்- நடக்கையிலேஎனவே சர்ச்சரையுடைய வுயர்ந்த இருள்போன்ற உருவமாய் நடக்கையிலே; அஞ்சுவருபேய்மகள்=அச்சந்தரும் பெண்பேய்; இதுவன்றியும் பனையினுயரம்போன்று நெடுமிய வடிவையும் அஞ்சத்தக்க பெண்பே யென்பாருமுளர். குருதியாடிய கூருகிர்க்கொடுவிரல்=குருதி-இரத்தம், ஆடிய - தோய்ந்த, கூருகிர் - கூர்த்தவுகிர், கொடுவிரல் வளைந்தவிரல் எனவே உதிரந்தோய்ந்த கூர்த்தநகம் பொருந்திய வளைந்த விரல்கொண்டு கண்டொட்டுண்ட=கண்களைத் தோண்டியுண்ணப்பட்ட, கழிமுடைக்கருந்தலை=பொல்லாத நாற்றத்தையுடைய பசுந்தலையை ஒண்டொடித் தடக்கையினேந்தி = அழகியவளை பொருந்திய பெரிய கையிலேயேந்திக்கொண்டு, வெருவர=கண்டவர்கள் பயப்பட, வென்றடுவிறற் களம்பாடி=வென்று கொன்ற வெற்றிக்களத்தைப் புகழ்ந்து, தோள்பெயரா = தோளையசைத்து நிணந்தின்வாயள்=நிணத்தைத் தின்கின்ற வாயுடனே. துணங்கைதூங்க = சிங்கிக்கூத்தை யாடிக்கொண்டு எனவே நிணந்தின்கிற வாயுடனே தோளையசைத்துச் சிங்கிக்கூத்தையு மாடிக்கொண்டு, இருபேருருவி னொருபேரியாக்கை=சூரனென்றும் பதுமனென்றும் இரண்டுபேராயுடைய வடிவமாய் ஒருபெரிய வுடம்புடைய, அறுவேறுவகையி னஞ்சுவரமண்டி =

அவனது மூலப்படை, கூலிப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என்று சொல்லப்பட்ட அறுவகைப் படையும் அஞ்சும்படி மேற்சென்று அவுணர் நல்வலமடங்க=அசுரனது சிறந்த வெற்றிமடிய, கவிழிணர்மாமுத றடிந்த = மாயையிலே கிளைக்கிப் பூத்தமாவாய் நிற்கும் சூரபன்மனை முதலோடே தடிந்த, மறுவில் கொற்றந்தெய்யா=குற்றமில்லாத வெற்றியினை யிளையாத நல்லிசைச் செவ்வேற்சேய்=நல்ல கீர்த்திபொருந்திய சிவந்தவேலையுடைய சுப்பிரமண்ணியனே. சேவடிபடருஞ் செம்மலுள்ளமொடு = சேவடி - சிவந்தபாதம், படரும் - செல்லும், செம்மல் - பெருமைபெற்ற, உள்ளமொடு - உள்ளத்தோடே எனவே சிவந்த பாதத்தைத்தேடிச் செல்லும் பெருமைபெற்ற வுள்ளத்தோடே. நலம்புரிகொள்கை = நன்மைமிக்க கோட்பாடு புலம்பிரிந்துறையும் = புலம் - தேசம், பிரிந்து - விட்டு உறையும் - தங்கும் எனவே - தங்கு மத்தேசம் விட்டு. செலவு நீ நயந்தனையாயின்=செலவு-போக்குப்புலவனே நீ விரும்பினையாயில். பலவுடனன்னர் நெஞ்சத்தின் னசைவாய்ப்பவின்னே பெறுதி நீ முன்னியவினையே=பலவுடன் - பலபரிசலாளருடனே, நன்னர் நெஞ்சத்து - நல்ல நெஞ்சத்தோடே, இன்னசைவாய்ப்ப - இனியவாசைப் பாடுபெற, இன்னேபெறுதி நீ-இப்படியே பெறுவை நீ, முன்னியவினையே - நீ நினைந்த கோட்பாடுகளே எனவே பரிசிலாளருடனே நல்ல நெஞ்சத்தோடே இனியவாசைப்பாடுபெற இப்படியே பெறுவை நீ நினைந்த கோட்பாடுகள்: இது பரிசில் பெற்று வழியிலே திரிபட்டு வருகின்ற புலவன் பரிசிலுக்குப் போகின்ற புலவனுக்குச் சொல்லியது. இனிப்பிள்ளையானைக் காணுமிடஞ் சொல்லுவர். செருப்புகன்றெடுத்த சேணுயர் நெடுங்கொடி = செருப்புகன்றெடுத்த - போர்கூறியெடுத்த, சேணுயர் நெடுங்கொடி - அதிதூரமாக வுயர்ந்த கொடி, வரிப்புனைபந்தொடு பாவைதூங்க=வரிப்புனை - வகைந்து செய்யப்பட்ட,

பந்தொடு - பந்துடனே, பாவைதூங்க - செம்மகளான பாவை தூங்க, பொருநர்த்தேய்த்த போரருவாயில்=பொருநர் - சத்துருக்கள், தேய்த்த - கெடுத்த, போரருவாயில் - அவர்களா பொருந்தற்கரிதான வாயிலையுடைய, திருவீற்றிருந்த தீதுதீ நியமத்து மாடமலி மறுகிற்கூடல் = திருவீற்றிருந்த - தேவி வீற்றிருந்த, தீது தீர் - குற்றந்தீர்ந்த, நியமத்து - திருப்பதியான மாடமலி மறுகு - மாடநெருங்கிய தெருகூடல் மதுரை - எனவே தேவிவீற்றிருந்த திருப்பதியான மாடம் நெருங்கிய தெருவை யுடைய மதுரைக்கு குடவயின்=மேற்கே இருஞ்சேற்ற கல யல்=மிகுந்த சேற்றினையுடைய வகன்றவயலிடத்து, விரிந் வாயவிழ்ந்த=வாய்மலர்ந்து விரிந்த முட்டாட்டாமரைத்து சி = முள்ளைத்தாளிலேயுடைய தாமரையினிடத்து நித்திரை பொருந்தி வைகறைகட்கமழ் நெய்தலூதி=விடியற்காலத்தி லே தேனூறுகின்ற நெய்தற் பூவையூதி - எற்படக்கண்போன் மலர்ந்த காமர்சுனைமலர் = பகரப்பட்ட கண்ணை யொக்க மலர்ந்த அழகிய சுனையிற் செங்கழுநீர்ப் பூவின். அஞ்சிறை வண்டி னரிக்கணமொலிக்கும்=அழகிதான சிறகினையுடைய வண்டினங்கள் சத்திக்கும் குன்றமர்ந்துறைதலு முரியன் = திருப்பரங்குன்றிடத்துப் பொருந்தி யெழுந்தருளி யிருத்தலு முரியன் என்றவாறு. அஃதான்று இரண்டாமஃதான்று=அது வன்றியும் சுப்பிரமண்ணியருந் திருவடிமுன் செல்லுவான்.

இரண்டாவது,

## திருச்சீரலைவாய்.

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை யோடையொடு துயல்வரப்
படுமணி யிரட்டு மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்

டைவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
யகலா மீனி னவிர்வன விமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிறமுகனே
மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக
மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றேயொருமுக
மந்திர விதியின் மரபுளி வழாஅ
வந்தணர்வேள்வி யோர்க்கும்மே யொருமுக
மெஞ்சிய பொருள்களை யேமுறநாடித்
திங்கள் போலத் திசைவிளக்கும்மேயொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சமமுறுக்கிக்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றேயொரு
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின் [முகங்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றேயாங்கம்
மூவிரு முகனு முறைநவின் றொழுகலி
னாரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலன் மரபி னையர்க்கேந்தியதொருகை
யுக்கஞ் சேர்த்திய தொருகை நலம்பெறு

கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய தொருகை
யங்குசங் கடாவ வொருகை யிருகை
யையிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்பவொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்பவொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வானர மகளிர்க்கு வதுவைசூட்ட வாங்கப்
பன்னிருகையும் பாற்படவியற்றி
யந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை நரல
வுரந்தலைக் கொண்ட வுருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
யுலகம்புகழ்ந்த வோங்குயர் விழுச்சி
றலைவாய்ச் சேறலு நிலைஇயபண்பே (அதாஅன்று.)

வைந்நுதிபொருத வடுவாழ்வரிநுதல் = வை - கூரிய, நுதி - முனை, பொருத - வெட்டின, வடு - புண், வாழ்தல் - அமர்தல், வரி - புகர், நுதல் - நெற்றி எனவே கூரியமுனையினையுடைய வங்குசத்தாலே வெட்டின புண்ணமர்ந்த புகரையுடைய நெற்றியிலே. வாடாமாலை யோடையொடு துயல்வரப்படுமணியிரட்டுமருங்கில் = வாடாமாலை - பொன்னரிமாலை, ஓடை - பட்டம், ஒடு - உடனே, துயல்வர - அசைதர, படுமணி - ஓசைமணி, இரட்டும் - ஒலிக்கும், மருங்கு - பக்கம் எனவே நெற்றியிற்கட்டிய பட்டத்துடனே பொன்னரிமாலை யசைதர ஓசைமணி யிருபக்கத்திலும் ஒலிக்கவும் கடுநடைக்கூற்றத்தன்ன மாற்றருமொய்ம்பின் = கடுநடை

கடியசெலவு, கூற்றத்தன்ன - கூற்றம்போன்ற, மாற்றருமொய்ம்பின் - மாற்றுதற்கரிய வலிய மொய்ம்பினையுடைய, எனவே கடியசெலவும் கூற்றம்போன்ற மாற்றுதற்கரிய வலியினையுமுடைய. கால்கிளர்ந்தன்னவேழம் = காற்றுக்கிளர்ந்ததையொத்த யானையின், மேல்கொண்டு=மேலேறிவரப்பட்ட, ஐவேறுருவிற் செய்வினைமுற்றிய முடியொடு = ஐந்துவகையாலே வேறுபட்ட செய்தொழில் முற்றியமுடி - அவையாவன, தாமம் - பதுமம் - பாமம் - கிம்புரிசேடம் இவை முடிக்கு - ஐவேறுருவே - கோடகம் - கிம்புரிமகுடம் - பதுமம்-காளகம் என்னு மைவகை முடியெனவுங்கொள்க. இதுவன்றிச் சடாமகுடம் - கிரீடாமகுடம் - தாண்டிகாமகுடம்-அமைமகுடம் - கண்ணிகாமகுடம் - என்னும் வகைமுடியெனினுமமையும், இந்தவகையால் செய்தொழில் முற்றிய முடியுடனே. விளங்கிப் முரண்மிகுதிருமணி மின்னுறழிமைப்பிற் சென்னிப் பொற்ப=விளங்கிய - விட்டுவிளங்கிய, முரண்மிகு - மாறுபாடுடைய, திருமணி - அழகிய இரத்தினங்கள், மின்னுறழ் - மின்னையொத்த, இமைத்தல் - விளங்கல், சென்னிப்பொற்ப - திருமுடிபொலிய எனவே விட்டுவிளங்கிய மாறுபாடுடைய அழகிய இரத்தினங்கள் மின்னையொத்து விளங்குந் திருமுடியிற்பொலிய. நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமைபொலங்குழை=நகை - ஒளி, தாழ்பு - தாங்குதல், துயல்வரூஉம்-அசைதரும், வகையமை-வேறுபட்டதொழில் சமைத்த, பொலங்குழை - பொற்குழை எனவே ஒளிதங்கியசைதரும் வேறுபட்ட தொழிலாற்சமைத்த பொற்குழை பொலங்குழை யென்பதைப் பொன்னென்கிளவி யென்பதனுன் முடிக்க. சேண்விளங்கியற்கை வாண்மதிகவைஇயகலாமீனினவிர்வனவிமைப்ப = சேண்-தூரம், விளங்குதல்-தோற்றம், இயற்கை - இயல்பு, வாள் - ஒளி, மதி-திங்கள் கவைஇ-சேர்ந்து, அகலாமீனின் - நீங்காத உடுக்களின், அவிர்வன-பாடஞ்செய்வனபோல், இமைப்ப - கிரணங்கள் விட்டுவிளங்க

எனவே அதிஞாரத்திலேதோன்றி இயல்புபெற்ற ஒளியினை யுடைய திங்களைச் சேர்ந்து விட்டுவிலங்காத உடுக்களைப் போல பாடஞ்செய்வனவாய் தோட்டினது கிரணங்கள் விட்டுவிளங்க. தாவில்கொள்கைத் தந்தொழின்முடிமார்மன னேர் பெழுதரு = தாவில் - கேடில்லாத, கொள்கை-கோட் பாடு, தந்தொழில் - தங்கணியமம், முடிமார் - முடிப்பார், மன ன்-நெஞ்சு, ஏர்பு - அழகு - எழுதரு - தோற்றந்தரும் என வே கேடில்லாத கோட்பாட்டொடு தங்கள் நியமங்கள் முடிப் பார் நெஞ்சினழகுபெறத் தோற்றந்தரும், வாணிறமுகனே= ஒளி விடுகின்றவாறுதிருமுகங்களை யுடையவன். அந்தத் திருமுகங்களின் படிவஞ் சொல்லில். மாயிருஞாலமறு வின்றி விளங்கப் பல்கதிர்விரிந்தன்றொருமுகம் = மாயிருஞா லம் - மிக்க பெரியபூமி, மறுவின்றி விளங்க - குற்றமில் லாதே விளங்க, பல்கதிர் - பலகிரணங்கள், விரிந்தன்றொரு முகம்-விரித்தாற்போலு மொருதிருமுகம் எனவே மிகவும் பெ ரியபூமி குற்றமில்லாதே விளங்கப் பலகிரணங்களை விரித்தா ற்போலு மொருதிருமுகம். மாயிரு ஒருபொருட்பன்மொழி. ஒருமுகமார்வலரேத்த வமர்ந்தினிதொழுகிக் காதலி னுவ ந்துவரங் கொடுத்தன்றே = ஒருமுகம் - ஒருதிருமுகம், ஆர் வலரேத்த - ஏழையரிரந்து துதிக்க, அமர்ந்தினிதொழுகி - இனிதாகவமர்ந்தொழுகி, காதலினுவந்து - பிரியப்பட்டுவ ந்து, வரங்கொடுத்தன்றே - அவர்களுக்கு வேண்டினவரங்க ளைக் கொடாநிற்கும், ஒரு திருமுகம் எனவே ஏழையுரிர ந்து துதிக்க இனிதாக வமர்ந்தொழுகிக் காதலுடையவர் களுக்கு வேண்டினவரங்களைக் கொடாநிற்கும். ஒருமுக மந் திரவிதியின்மரபுளிவழாஅ அந்தணர்வேள்வியோர்க்குமே= ஒருமுகம் ஒரு திருமுகம், மந்திரவிதியின் - மந்திரங்களினது விதிமுறையின், மரபுளிவழா - முறைமை வழுவாது, அந் தணர் வேள்வியோர்க்குமே - அந்தணருடைய வேள்விகளைத் திருவுள்ளத்தினடைக்கும் எனவேஒருதிருமுகம் மந்திரங்களி

னுடைய விதிமுறையின் ஒழுக்கத்தைவழுவாத அந்தணருடைய வேள்விகளைத் திருவுள்ளத் தடைக்கும். அந்தணர் - என்றது = அழகிய தட்பத்தினையுடையானென்பது. மரபுளி யென்புழி உளி என்பது மூன்றுவதன் பொருள்படுவதோரிடைச்சொல்=ஒருமுகம் எஞ்சியபொருள்களையே முறநாடித் திங்கள்போலத் திசைவிளக்கும்மே=ஒருமுகம்-ஒருதிருமுகம் எஞ்சிய பொருள்களை-வேதங்களில் மறைந்த பொருள்களை, ஏமுறநாடி-இலக்கைப் பொருந்த வாராய்ந்து, திங்கள்போல் சந்திர மண்டலம்போல, திசைவிளக்கும்மே - திக்குகளை விளக்காநிற்கும் - எனவே ஒரு திருமுகம் வேதங்களின் மறைந்தபொருள்களை இலக்கைப்பொருந்த வாராய்ந்து சந்திரமண்டலம்போலத் திக்குகளை விளக்காநிற்கும். ஏமமென்பது கடைக்குறைப்பட்டது. ஒருமுகம் செறுநர்த் தேய்த்துச் செல்சமமுருக்கிக் கறுவுகொணெஞ்சமொடு களம்வேட்டன்றே = ஒருமுகம் - ஒரு திருமுகம், செறுநர்த்தேய்த்து - மாற்றலரைக் கெடுத்து, செல் - வரவு, சமம் - போர், முருக்கி - கொன்று, கறுவுகொள் - வெகுளியைக் கோட்பாடுகொண்ட, நெஞ்சமொடு - உள்ளத்தோடே, களம்வேட்டன்றே-போர்க்களத்தை விரும்பாநிற்கும் எனவே ஒரு திருமுகம் மாற்றலரைக் கெடுத்து வரப்பட்ட பேரைக்கொன்று வெகுளியைக் கோட்பாடுகொண்ட வுள்ளத்தோடே போர்க்களத்தை விரும்பாநிற்கும். ஒருமுகம் குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் மடவரல் வள்ளியொடுநகை யமர்ந்தன்றே=ஒருமுகம் - ஒருதிருமுகம், குறவர் மடமகள்-குறவரிடத்து வந்தமடப்பத்தினையுமுடைய பெண்பிள்ளை, கொடிபோல் நுசுப்பின்-வல்லிசாதக் கொடிபோன்ற இடையினையும், மடவரல் வள்ளியொடு-கற்பின் வரலாற்றினையுமுடைய வள்ளி நாய்ச்சியாருடனே, நகையமர்ந்தன்றே - மகிழ்ச்சி பொருந்தாநிற்கும், எனவே. ஒரு திருமுகம் குறவர்பால்வந்த மடப்பத்தினையும் வல்லிசாதக்கொடிபோன்ற இடையினையும்

கற்பின் வரலாற்றினையுமுடைய வள்ளிநாய்ச்சியாருடனே மகிழ்ச்சி பொருந்தாநிற்கும். ஆங்குமூவிரு முகனும் = அவ்வனத்திலே ஆறு திருமுகங்களும், முறைநவின் றொழுகலின் = முன்புகூறப்பட்ட முறைமையிலே விளங்கியொழுகா நிற்கும். ஆரந்தாழ்ந்தவம் பகட்டுமார்பிற் செம்பொறிவாங்கிய மொய்ம்பு = ஆரம் - ஆபரணம், தாழ்ந்த - தாங்கிய, அம் - அழகு, பகடு - பெருமை, மார்பின் - மார்பிலே, செம்பொறி - ஸ்ரீதேவி, வாங்கிய - கைக்கொண்ட, மொய்ம்பு - வலியினையும் எனவே ஆபரணந்தாங்கிய அழகிய பெருமை பொருந்திய மார்பிலே ஸ்ரீதேவியைக்கொண்ட வலியினையும், சுடர்விடுபுவண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள் = சுடர்விடுபு - ஒளிவிடுகின்ற, வண்புகழ் நிறைந்து - வளவியபுகழானது நிறைந்து, வசிந்து - வளர்ந்து, வாங்கு - நீண்டு, நிமிர்தோள் - நிமிர்ந்ததோள். எனவே ஒளிவிடுகின்ற வளவிய புகழ் நிறைந்து வளர்ந்து நீண்டு நிமிர்ந்த தோள்கள். விண்செலன் மரபினையர்க் கேந்திய தொருகை = விண் - ஆகாயம், செலல் - இயக்கம், மரபின் - முறைமையாகவுடைய, ஐயர்க்கு-தேவர்களுக்கு, ஏந்திய தொருகை அமைத்த தொருகரம் எனவே ஆகாயத்திலே இயக்கத்தை முறைமையாகவுடைய தேவர்களுக்கு அபயத்தங்கொடா நிற்கும் ஒருகரம். உக்கஞ்சேர்த்திய தொருகை = மருங்குல் சேர்த்திய தொருகரம். நலம்பெறுகலிங்கத்துக் குறங்கின்மிசையசைஇய தொருகை = நலம்பெறு - அழகுபெற்ற, கலிங்கத்து-புடைவை, குறங்கின்மிசை-தொடையின்மீதே, அசைஇய தொருகை - வைத்ததொரு கரம் எனவே அழகுபெற்ற தொடையிடத்துப் புடைவையின்மீதே வைத்த தொருகரம். அங்கு சங்கடாஅவ ஒருகை = அங்குசம் - ஆனைத்தோட்டி கடாஅவ - செலுத்த, ஒருகை - ஒருகரம் எனவே ஆனையைத் தோட்டியாற் செலுத்தி நடத்தா நிற்கும் ஒருகரம் இருகை ஐயிருவட்டமொ டெஃகுவலந் திரிப்ப = இருகை -

இரண்டுகரமும், ஐயிருவட்டமொடு - ஐந்தாகிய பெருத்தபரிசையுடனே, எஃகு - வேல், வலந்திரிப்ப வெற்றிபெறச் சுற்ற எனவே ஐந்தாகிய பெருத்த பரிசையுடனே வேல் வெற்றி பெறச்சுற்றஇரண்டுகரமும், இதுவன்றி ஐயிருவட்டம்-பத்து திருமுகத்தினையுடைய கேடகமென்னு மமையும். ஒருகை மார்பொடுவிளங்க = ஒருகரந் திருமார்பின் மவுனமந்திரத்தைப்பெறாநிற்கும். ஒரு கைதாரொடு பொலிய = ஒருகரந் திருமார்பிலே திருமாலையைத் திருத்தா நிற்கும். ஒருகைகீழ் வீழ்தொடியொடு மீமிசைக்கொட்ப = ஒருகரம் பாரவளையோடே மென்மேலுஞ் சுற்றாநிற்கும். ஒரு கைபாடின்படுமணியிரட்ட = ஒருகை - ஒரு கரம், பாடின் - பாடுமிசை, இன் - இனிமை, படுமணி - ஆடுகின்றமணி, இரட்ட - ஒலிப்ப எனவே ஒரு கரம் இசையினிமையாக வாடுகிற மணியை ஒலியாநிற்கும். ஒருகை நீனிறவிசும்பின் மலிதுளிபொழிய = ஒருகரம் நீல நிறத்தையுடைய ஆகாயத்தின் மிக்கதுளியைப் பொழியாநிற்கும். ஒருகைவானர மகளிர்க்கு வதுவைசூட்ட = ஒருகரந் தெய்வமகளிருக்கு மாலையைச்சூட்டாநிற்கும். ஆங்கப் பன்னிருகையும் பாற்படவியற்றி = ஆகமுதற் கூறப் பட்ட பன்னிரண்டு கரங்களும்முன்சொன்ன ஆறு திருமுகத் துக்கும் பொருந்தும் வகைசொல்லுகின்றது. முன்சொன்ன மாயிருஞாலத்து மறுவின்றிவிளங்க என்ற திருமுகத்துக்கு நீனிறவிசும்பின் மலிதுளிபொழிய என்றது இடக்கரமாகவும், அங்குசங்கடாவவென்றது வலக்கரமாகவுங் கொள்க. ஆர்வலரொன்ற திருமுகத்துக்கு உக்கஞ் சேர்த்தியதென்றது இடக்கரமாகவும் நலம்பெறு கலிங்கத்து என்றது வலக்கரமாகவுங்கொள்க. மந்திரவிதியின் மரபுளிவழாஅ என்ற திருமுகத்துக்குபாடின் படுமணி இரட்டவென்ற திடக்கரமாகவும் விண்செலன் மரபினையர்க் கேந்தியதென்றது வலக்கரமாகவுங்கொள்க. எஞ்சிய ,பொருள்களையென்ற திருமுகத்துக்கு கீழ்வீழ்தொடியொடு என்ற திடக்கரமாகவும், மார்பொடுவிள

ய்க 'வென்றது வலக்காரமாகவுங் கொள்க. செறுநர்த்தேய்த்த என்ற திருமுகத்துக்கு ஐயிரு 'வட்டமென்றதிடக்காரமாகவும் எஃகுவலர்த்திரிப்பவென்றது வலக்காரமாகவுங் கொள்க. குறவர் மடமகளென்ற திருமுகத்துக்குத் தாரொடு பொலியவென்றதிடக்காரமாகவும், வானரமகளிர்க்கு வதுவைசூட்டவென்றது வலக்காரமாகவுங்கொள்க. அந்தரப்பல்லியங்கறங்கத்திண்காழ் வயிரெழுந்திசைப்ப வால்வளை ஞரல=அந்தரம் ஆகாயத்திலே, பல்லியம்-பலவாச்சியம், கறங்க-முழங்க, திண் - திண்ணிய, காழ் - கறுப்பு, வயிர் - கொம்பு, எழுந்து - மிக்கு, இசைப்ப - ஊத, வால் - வெண்மை, வளை-சங்கு, ஞால - குறிப்ப எனவே ஆகாயத்திடத்திலே பலவாச்சிய முழங்கத் திண்ணியதாய் கறுத்தகொம்பு மிகவு மூதவெண் சங்குகுறிப்ப. உரந்தலைக்கொண்ட உருமிடி முரசமொடு = உரம் - வலி, தலைக்கொண்ட=மேல்கொண்ட, உருமிடி முரசமொடு - உருமிடிந்தாற் போன்ற முரசுடனே, பல்பொறிமஞ்ஞைவெல் கொடியகவ=பல்பொறி - பலவரிகள், மஞ்ஞை - மயில், வெல் கொடி - வெற்றிக்கொடி, அகவ-படர=எனவே பலவரிகளையுடைத்தாய வெற்றி மயிற்கொடி முன்னெடுத்துப்படர. விசும்பாறாக விரைசெலன் முன்னி = ஆகாயம்வழியாக விரைந்து செல்ல நினைந்து. ஆகாயம் வழியாகமுற்கூறப்பட்ட வேழத்தை மேல்கொண்டு துறக்கத்துக்கு விரைந்து செல்லவுன்னி. உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீரலைவாய்ச்சேறலு நிலைஇயபண்பே = உலகம் புகழ்ந்த - உயர்ந்தோர் துதித்த, ஓங்குயர் - மிக்க, விழுச்சீர் - விழுமிய வழகு, அலைவாய்ச் சேறலும் - அலைவாய்ச்செறிதலும், நிலைஇய பண்பே - சார்வுதரும் எனவே உயர்ந்தோராற் றுதித்த மிக்க விழுமிதான வழகுபெற்ற சீரலைவாயென்கிற திருப்பதியிலே சார்வுதருமென்றவாறு அலைவாயென்றது நாமனூரலைவாயை. அஃதான்று அதுவன்றியும்.-

## மூன்றாவது,

## திருவாவினன்குடி.

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற விமைக்கு முருவினர் மானி
னுரிவை தைஇய வூன்கெடு மார்பி
னென்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டிய ரிகலொடு
செற்ற நீக்கிய மனத்தின ரியாவதுங்
கற்றோ ரறியா வறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புகப்
புகைமுகந் தன்ன மாசி றூவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவ்வி
னல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவி
னவிர்தளிர் புரையு மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலைய ரின்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குன்
மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவோ டொடுங்கிய தூம்புடைவாலெயிற்
றழலென வுயிர்க்கு மஞ்சுவரு கடுந்திறற்

பாம்புபடப் புடைக்கும் பல்வரிக்கொடுஞ்சிறைப்
புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோ
ளுமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனு
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றியவென்றடு கொற்றத்
தீரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்தயானை
யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனு
நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
வுலகங் காக்கு மொன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
வேமுறு ஞாலந்தன்னிற் றோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்று மிகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரோ
டொன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்னதோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
வுருமிடித் தன்ன குரலினர் விழுமிய
வுறுகுறை மருங்கிற்றம் பெறுமுறை கொண்மா
ரந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னா
ளாவி னன்குடி யசைதலு முரியனதா அன்று.

சீரை தைஇய வுடுக்கையர் = சீரை - மரவுரியை, தைஇய - தைத்த, உடுக்கையர் - உடையினையுடையார் எனவே மரவுரியைத் தைத்தவுடையினையுடையார். சீரொடுவலம்புரி புரையும் வானரைமுடியினர்=சீரொடு - அழகுடனே, வலம்புரி - சங்கு, புரையும் - ஒக்கும், வால்-வெள்ளை, நரைமுடியினர்-நரைக்கொண்டையையுடையாரெனவே அழகுடனே சங்கையொத்த வெள்ளை நரைக் கொண்டையினையுடையார். மாசறவிமைக்கு முருவினர் = குற்றமறவிளங்கும் நிறத்தினையுடையார், மானினுரிவை தைஇயவூன்கெடுமார்பினென்பெழுந்தியங்குமியாக்கையர் = மானினுரிவை - மான்றோல், தைஇய - தைத்திட்ட, ஊன்கெடு மார்பின் - தசைமாண்டமார்பின், என்பெழுந்தியங்கு மியாக்கையர் - என்பெழுந்தியங்குமாற் போன்ற வுடம்பினையுமுடையார். நன்பகற்பலவுடன் கழிந்தவுண்டியர் = நன்பகல் - நல்லதிவசங்கள், பலவுடன்-பலவுபகாரங்கள், கழிந்தவுண்டியர் - ஒழிந்தவுணவினையுடையார். இகலொடுசெற்ற நீக்கிய மனத்தினர்=மாறுபாட்டுடனே சினத்தையொழிந்த மனத்தினையுடையார். யாவதுங் கற்றோரறியாவறிவினர் = எவ்வகைப்பட்ட பொருள்களையுங் கற்றுவல்லுநராலு மறியப்படாத வறிவுமிக்கார் - கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர் = பலகலைஞானங்களையுமறிந்தோர்க்குத் தாங்கள் எல்லையாகிய மிக்கோர் - காமமொடு கடுஞ் சினங்கடிந்த காட்சியர் = காமம் வெகுளி முதலானவையெல்லாந் தவிர்ந்த தோற்றத்தினையுடையார். இடும்பை யாவதுமறியா வியல்பினர் = துக்கமெல்லா மறியப்படாத வொழுக்கத்தினையுடையார். மேவரத்துனியில் காட்சிமுனிவர் முற்புக=மேவர - முற்கூறப்பட்ட சிறப்புகளெல்லாம் பொருந்த, துனியில் - துயரமில்லாத, காட்சி - தோற்றம், முனிவர் - இருடிகள், முற்புக - முன்னேபுகுத எனவே முற்கூறப்பட்ட சிறப்புகளெல்லாம் பொருந்த துயரமில்லாத தோற்றத்தினையுடைத்தாய் இருடிகள் முன்வந்து புகுதர-

புகைமுகந்தன்ன மாசில்தூவுடை=புகையைக் கையாலே முகந்தாற்போன்ற நொய்யவாய குற்றமில்லாத வுடையினையுடையார். முகைவாயவிழ்ந்த தகைசூழாகத்து = முகை-மொட்டு, வாயவிழ்ந்த - கிண்கிணிவாய்க்கொண்ட, தகைசூழ் - மாலைசூழ்ந்த, ஆகத்து - மார்பினையும் எனவே மொட்டுப்பூக்கிண்கிணிவாய்க்கொண்ட பக்குவத்திலே கட்டின மாலைசூழ்ந்த மார்பினையும். செவி நேர்புவைத்த செய்வுறுதிவவினல்லியாழ் நவின்ற நயனுடைநெஞ்சின் = செவிக்குப் பொருந்தவைத்த தொழில்களாலமைந்த நரப்புக்கருவியினையுடைய நல்லியாழினது சொற்பொருந்திய நயப்பினையுடைய நெஞ்சத்தோடே. மென்மொழிமேவலரின்னரம்புளர= மென்மொழி மேவலர் மெத்தென்ற சொற்சேர்ந்தோர், இன்னரம்புளர - இனிய நரம்புவாசிக்க அவர் வித்தியாதரர். நோயின்றியன்ற யாக்கையர் = நோயில்லாதபடி செய்த வுடம்பினர். மாவினவிர்தளிர் புரையுமேனியர் = மாவினது பாடஞ். செய்யுந் தளிரினையொத்த நிறத்தினையுடையார். அவிர்நொறு மென்பது பாடஞ்செய்யுந்தோறும். பொன்னுரைகடுக்குந்திதலையர் = பொன்னுரைத்தாற்போன்ற துத்தியாகிய பொறியுடைய மேனியர். இன்னகைப்பருமந்தாங்கிய பணிந்தேந்தல்குல் = இன்னகை - அழகிய வொளி, பருமம்-அரைப்பட்டிகை, தாங்கிய - தரித்த, பணிந்து - தாழ்ந்து, ஏந்தல்குல் - ஏந்தினவல்குல் - எனவே அழகிய வொளிபொருந்திய அரைப்பட்டிகைதரித்த தாழ்ந்தேந்தின வல்குலையுடைய, மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்க=மாசில் மகளிரொடு-குற்றமில்லாத மடந்தையருடனே மறுவின்றி விளங்க -முன்சொன்ன வித்தியாதரரும் இதற்குரித்தான மடந்தையருமொழிய இதற்குரித்தல்லாத பேர்கள் கூடாதே விளங்கப்பட்டு ; இதுவன்றியும், மாசின் மகளிரென்பது - குற்றமில்லாத தெய்வக்குறத்திகள் என்பாருமுளர். கடுவோடொடுங்கிய தூம்புடைவாலெயிற்றழலென வுயிர்க்கும் = கடு-விடம், ஒடுங்கிய - ஒடுக்கியோடப்பட்ட, தூம்புடைய - தொளையையுடைய, வாலெயிற்று - வெள்ளை யெயிற்றினை

யும், அழலென்ன வுயிர்க்கும் - நெருப்பெனஉயிர்க்கும்; என வே விடமொடுங்கி யோடப்பட்ட தொளையையு முடைய வெள்ளெயிற்றையும் அழல்போன்று விடு முயிர்ப்பினை யுமுடைய, அஞ்சுவருகடுந் திறற்பாம்பு படப்புடைக்கும்= அஞ்சுவரு - கண்டோரஞ்சும்படி வருகின்ற, கடுந்திறல் - மிகுந்தவலி, பாம்புபட - பாம்புசாக, புடைக்கும் - அடிக்கும்; எனவே கண்டோரஞ்சும்படி வருகின்ற பாம்பைச் சாகவடிக்கும், பல்வரிக்கொடுஞ் சிறைப்புள்ளணி நீள்கொடிச் செல்வனும் = பல்வரி - பலவரிகள், கொடுஞ்சிறை - வளைந்த சிறகு, புள் - கருளன், அணிநீள்கொடி - அணிந்த மிகு கொடி, செல்வனும் விண்டுவும் எனவே பலவரிகளையும் வளைந்த சிறகினையுமுடைய கருளனையணிந்த மிக்ககொடியினையு முடைய விண்டுவும், வெள்ளேறு வலவயினுயரிய பலர்புகழ்திணிதோள் = வெள்ளேறு - வெள்ளையிடபம், வலவயினுயரிய-வெற்றியினாலேறிய, பலர்புகழ் திணிதோள்-பலரும் புகழ்கின்ற திண்ணியதோளினையுடைய; எனவே வெள்ளையிடபத்தை வெற்றியினாலேறிக்கொண்டு பலரும் புகழ்திண்ணியதோளினையுடைய, உமையமர்ந்து விளங்கும்=பாகத்திலே உமையாள் விளங்கவும் பட்டு, இமையாமுக்கண் மூவெயின் முருக்கிய = இமைப்பில்லாத மூன்று நயனத்தை யுடையராய் மூன்று கோட்டையாகிய திரிபுரங்களைவென்ற, முரண்மிகு செல்வனும் = மிக்க வலியினையுடைய உருத்திரனும் எனவே வெள்ளை நிறத்தினையுடைய இடபத்தைமேற்கொண்டருளிய பலர் புகழ்கின்ற திண்ணிய தோளினையுடையபாகத்திலே உமையாள் விளங்கவும் பட்டு இமைப்பில்லாத மூன்று நயனத்தினையுடைய திரிபுரங்களை வென்ற மிக்கவலியினையுடைய உருத்திரனும், நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து = நூற்றுப்பத்தாயிர மடுக்கிய மென்மேல்வைத்த நயனங்களையுடையனுமாய் நூறுபல்வேள்வி முற்றிய=

பலவகையான நூறுயாகமுடிந்து, வென்றடு கொற்றத் தீரி
ரண்டேந்திய மருப்பி னெழினடை = வென்றடு - கொ
ன்ற, கொற்றத்து - வெற்றியினையுடைய, ஈரிரண்டேந்திய
மருப்பினெழினடை - நாலுகோட்டினையு மேந்தி அழகிய
நடையைச் சொல்லப்பட்ட, தாழ்பெருந் தடக்கையுயர்ந்த யா
னை = தாழ்ந்த பெருத்த வலிய துதிக்கையினையுடைய வுயர்
ந்த யானையாகிய அயிராவதத்தின், எருத்தமேறிய திருக்கிளர்
செல்வனும் = கழுத்தின் மேற்கொண்ட திருமிக்க செல்வ
னாகிய இந்திரனும், நாற்பெருந் தெய்வத்து = நாற்பெருந்
தெய்வமென்றார், அந்தணர் தெய்வம், அரையர் தெய்வம்,
வசியர் தெய்வம், சூத்திரதெய்வம் என்பதைச் சில
ப்பதிகாரத்தாற்கண்டு கொள்க. நன்னகர் நிலைஇய = நல்
லநகரிகளையு நிலைபெறுத்த வானமைந்து, உலகங்காக்கு
மொன்று புரிகொள்கை = உலகத்தைக் காக்கவேண்டுமெ
ன்று ஒருமைப்பாட்டினை யுடையராய், பலர்புகழ் மூவருந்
தலைவராக=பலரும் புகழப்பட்ட மூத்தேவரும் தலைவராக,
ஏமுறு ஞாலந் தன்னுட்டோன்றி = ஐயமிக வுடைத்தாய பூமி
யினிடத்திலே வந்துவிளங்கி, தாமரைபயந்த தாவிலூழி நான்
முகவொருவற்சுட்டி=தாமரைப்பூவின் கட்டோன்றிக் கேடி
ல்லாத காலத்தினையுடைய நான்முகனாய வயனுக்காக முன்
சொன்ன மூவரும் பூமியின்கண்வந்து தோன்றி, அது பின்னை
யாக அயனைச் சிறையிடுகையில் அவர் எழுந்தருளி
யிருக்குந் திருவாவினன்குடியிற் சென்று அயனை விடுவிக்
கப் பூமியின்கண்வந்ததெனக் கொள்க. காண்வர=காட்சி
பெற, பகலிற்றோன்று மிகலில் காட்சி = பகலாகிய அருக்
கனைப் போலத்தோன்றாநின்ற மாறுபாடில்லாத தோற்றம்,
நால்வேறியற்கை = நான்குவேற்றுமைப்பட்ட இயல்பு என
வே காட்சிபெற ஆதித்தனைப்போல விளங்கி மாறுபாடில்லாத
தோற்றமுடைத்தாய நாலுவேற்றுமைப்பட்ட வியல்புபெற்ற

பின்னரும் நால்வேறியற்கை=சாலோகம்-சாமீபம்-சாரூபம்-சாயுச்சியம் எனநின்ற நாலுவேற்றுமைப்பட்ட வியற்கையென்பாருமுளர். பதினொருமூவரோடு=வெவ்வேறாகச் சொல்லப்பட்ட பதினொருமூவராவார் மூன்று பதினொன்றாதலால் முப்பத்துமூவரெனக்கொள்க. அவர்களைப் பிரித்துக்காண்பது-உருத்திரர் பதினொருவர், ஆதித்தர் பன்னிருவர், வசுக்கள் எண்மர் மருத்துவரிருவர் ஆகவேற்றுமை நாலாகியதேவர்கள் முப்பத்துமூவரையுமெனக் கொள்க. ஒடு = இவர்களுடனே ஒன்பதிற்றிரட்டி யுயர்நிலைபெறீஇய=ஒன்பதிற்றிரட்டி - பதினெண்பூமி, உயர்நிலைபெறீஇய-மிக்கபதங்களையும் பெற்றுடையருமாய் எனவே முற்கூறப்பட்ட தேவர்கள் முப்பத்துமூவருடனே பதினெண்பூமியின் மிக்கபதங்களையும் பெற்றுடையருமாய், ஒன்பதிற்றிரட்டி = பதினெண்கணங்களென்பாருமுளர். மீன்பூத்தன்னதோன்றலர் = உடுக்களாகாயத்திலே விளங்கினாற்போன்ற தோற்றத்தினையுடையராய், மீன்சேர்பு வளிகிளர்ந்தன்ன செலவினர்-மின்னுடனே காற்றுக்கிளர்ந்தாற்போன்ற செலவினையுடையராய், வளியிடைத் தீயெழுந்தன்ன திறலினர் = காற்றுடனே அக்கினியெழுந்தாற்போன்ற செலவினையுடையராய், தீப்பட வுருமிடித்தன்ன குரலினர் = அக்கினிதோன்றும்படி யிடியிடித்தாற்போன்ற சத்தத்தையுடையராய், விழுமிய வுறுகுறை மருங்கிற்றம்பெறு முறைகொண்மார் = விழுமியவுறு - தவங்களுக்குறுதியான, குறைமருங்கில் - குறைவற்ற விடங்களிலே, தம்பெறுமுறை கொண்மார் - தங்களாற் பெறவேண்டிய தொழில்களைக் கொண்டிருப்பான் வேண்டி, அந்தரக்கோட்பினர் வந்துடன் காண = ஆகாசத்து மின்னுகின்ற கோட்பாட்டினை யுடையார்வந்து திரண்டுசேவிக்க, தாவில்கொள்கை மடந்தையொடுசின்னாள், கேடில்லாத கொள்கையையுடைய தெய்வயானையாருடனே. சிலநாள், ஆவினன்குடி=திருவாவினன்குடியிடத்

தே அசைதலுமுரியன்=எழுந்தருளி யிருத்தலுமுரிய னென்றவாறு. அயனைச்சுட்டிந் தேவர்கள்வந்த காரணமென்னையோவென்னில் தெய்வயானையாரைத் திருமணம் கொண்டருளும்போது உருத்திரனரிவலாரி முதலாய தேவரெல்லாம் சேவித்திருக்கையிலே அயன் நாம் வேளத்தனை வேண்டிக்கொள்க் காரணமென்னென அதனைப்பிள்ளையார் திருவுள்ளத்தடைத்து அவன் பதத்தைமாற்றி விடுகையானவன்பநீண்டுமுதவ வேண்டுமென்று வந்தார்களெனக்கொள்க. இதனைச்சித்தன்வாழ்வென்று கூறுவாருமுளர். சித்தன் என்பது பிள்ளையாருக்கொருபெயர் அஃதான்று அதுவன்றியும்.

நான்காவது.

## திருவேரகம்.

இருமூன் றெய்திய வியல்பினின் வழாஅ
திருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
யறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்
டாறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
வொன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
யுச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்
தாறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்
தேரகத் துறைதலு முரிய னதாஅன்று.

இரு மூன்றெய்திய வியல்பினின் வழா திருவர்ச்சுட்டிய பல்வேறு தொல்குடி = இருமூன்று - ஆறு, அறுவன - ஓதல் ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்

என்கின்ற ஆறுதொழிலையும், எய்திய - அடைந்த, இயல்பி னின் - ஒழுக்கத்தின், அறு வைதிகாசாரம், வழாஅது - வழு வாது, இருவர்ச்சுட்டிய - மாதாவையும் பிதாவையுங்குறித்த, பல்வேறுதொல்குடி - பலவாக வேறுபட்ட பழயமரபா யுள்ளார் எனவே அறுவகையான ஓதல், ஓதுவித்தல், வேட் டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்கின்ற அறுவகைத் தொழிலையும் அடைந்த ஒழுக்கத்தினையுடைய வைதிகசாரம் வழுவாது, மாதாவையும் பிதாவையுங்குறித்த பலவாக வேறு பட்ட பழயமரபாயுள்ளோர். அறுநான்கிரட்டி யிளமை நல்லியாண்டு = இளதாகிய நல்லவயது இருபத்துநாலை யிர ட்டித்தால் நாற்பத்தெட்டு எனவே இளையதாகிய நல்லவயதை ஆறினிற்கழிப்பிய வறனவில்கொள்கை = ஆறினில் - வேதஞ் சொன்னவழியிலே, பிரமசரிய எனப்படுமொழுக்கத்திலே, கழிப்பிய - கழித்து, அறன்-தருமம், நவில் - ஓதி, கொள்கை- கோட்பாடு எனவே தனக்கு முறைமையான வேதஞ்சொன்ன வழியிலே பிரமசரிய மெனப்படுமொழுக்கத்தாலே அறுநான் கிரட்டிய நாற்பத்தெட்டு வயதைக்கழித்து தருமசாத்திரங்க ளையோதி, இந்தக் கோட்பாட்டுடனே வியாகரணம், சோதி டம் - நிருத்தம், சிக்ஷை - ஆறிற்கழிப்பிய, = சைவம், பாசு பதம், சுத்தம், சாவித்தியங்க ளாறுமுகமென்று சொல்லப் பட்ட ஆறுசமயங்களினும் கழித்து சந்தேவிய மெனினுமமை யும் மூன்றுவகைக்குறித்த முத்தீச்செல்வத்து = மூன்றுபிரி வாய் நிச்சயித்த மூன்றுவது ஒன்றுவேதத்தை வழங்கவும் ஒன்று தேவர்கட்குத் தட்சணைகொடுக்கவும் ஒன்று பூலோ கத்தை இலட்சைபண்டவும் இவ்வாறுய முத்தியாவனகாருக பத்தியமென்றும் தட்சணாக்கினியென்று மாகவனியமென் றும் மூன்றுகச்சொல்லப்பட்ட வக்கினிச்செல்வத்து = இங் ஙன்ம் மூன்றுப் நிச்சயித்த அக்கினிகளைத் தமக்குப்பேருசு வுடைய, இருபிறப்பாளர் = மாதாவுதரத்தினின்று முற்ப

வித்ததொருபிறப்பு, உபநயநத்தினுற் ேறன்றிய தொருபிற ப்பு, இவற்று லிரண்டு பிறப்புடையார் 'சற்றுங்கெரியோ ம்பி' எனப்பிறர் கூறலுமிப் பெற்றிநோக்கி; பொழுதறிந்து நுவல = உதயகாலத்தும் மத்தியானகாலத்தும் அத்தமனகா லத்தும் தாபனம் - அனுட்டானம் - பூசை, நுவல = இந்த மூன்றுகாலத்திலே மூன்று தொழிலேயும் முயன்று செய்ய ஒன்பது கொண்டமூன்று புரிநுண் ஞாண் - ஒன்பது இழை யையும் நவசத்தியாயாக்கொண்டு. மூன்றுபுரியாக முறுக்கின வடத்தை. மும்மூர்த்தியாக்கிக்கொண்டு, புலராக்காழகம்புல ரவுடீஇ=நானம்பண்ணிப் புலராத புடைவையை யுடம்பிலே புலரவுடுத்து, உச்சிக்கூப்பிய கையினர்=பிள்ளையார்சிபாதத் தைநினைந்து தலேமேற்கைகுவித்து ஆறெழுத்தடக்கிய வரு மறைக்கேள்வி=ஆறெழுத்தடக்கிய வேதாகமங்களை, 'ஆறு திருவெழுத்துங் கூறுநிலேகண்,' டெனப்பிறருங்கூறுதலானு மறிக. நாவியன்மருங்கினவிலப்பாடி=நாவாலியன்ற விடத் திலே கைவரவோதி, விரையுறு நறுமலரேந்தி=தேனையுற்ற நறுநாற்றங்களையுடைய திருப்பள்ளித் தாமங்களையேந்திக்கொ ண்டு பெரிதுவந்தேரகத் துறைதலுமுரியன்=பெரிதுவந்து- மிகவும்விரும்பி, ஏரகத்துறைதலும் திருவேரகமென்னுந்திருப் பதியிலே எழுந்தருளியிருத்தலுமுரியன் என்றவாறு. திருவே ரகமென்பது மலேநாட்டகத்ததோர் திருப்பதி அஃதான்று.

ஐந்தாவது.

## குன்றுதோறாடல்.

பைங்கொடி நறைக்கா யிடையிடுபு வேல
னம்பொதிப்புட்டில் விரைஇக்குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணிய
னறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந் தொழில்-வல்விற்கொலேஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறற்

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர
விரலுளர்ப் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
யிணைத்த கோதை யணைத்த கூந்தல்
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கான் மராஅத்த வாலிண ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்து காழல்கு றிளைப்பவுடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக்கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
றகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடிய னெடியன் றொடியணிதோள
னரம்பார்த் தன்னவின்குரற்றொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண்சாயன்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ்தடக்கையினிகல்வேலேந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத்தலை தந்து
குன்றுதோ றாடலு நின்றதன் பண்பே
அதா அன்று.

பைங்கொடிநறைக்கா யிடையிடுபுவேலன் = பைங்கொடி - பச்சிலைக்கொடி, நறைக்காய் - சாதிக்காய், இடையிடுபு வேலன் - இடையிட்டு வெறியாடுவான் எனவே பச்சிலைக் கொடியுஞ் சாதிக்காயு மிடையிட்டு வெறியாடுவான் அம்பொதிப்புட்டில் = அழகியதற்கோலப் புட்டில் இலைவிளாஇய =

இலைவிரவிய, குளவியொடுவெண் கூதாளந்தொடுத்தகண்ணி யன்=குளவியொடு-தாளிப்பூவோடு, வெண்கூதாளம் - வெள்ளைக்கூதாளப்பூ, தொடுத்த கண்ணியன் - பிணைத்த மாலையன். நறுஞ்சாந்தணிந்த கேழ்கிளர்மார்பில்=நறுஞ்சாந்தணிந்த-நறு நாற்றத்தையுடைய சந்தனத்தைப் பூசி, கேழ் - நிறம், கிளர்-மிகுதி, மார்பின் - மார்பினையுடைய எனவே நறுநாற்றத்தை யுடைய சந்தனத்தைப்பூசிநிறத்தமிக்க மார்பினையுடையராய், கொடுந்தொழில் = கொடியதொழில், வல்வில் - வலியவில் கொலைஇய - கொலைபொருந்திய, கானவர் - வேடர் எனவே கொடிய தொழிலினையுடைய வலியவில்லாற் கொலைபொருந்திய வேடுவர், நீடமைவிளைந்த தேக்கட்டேறல் குன்றகச்சிறு குடிக்கிளையுடன் = நீடமை - நெடியமூங்கிலில், விளைந்த - உண்டான, தேம் - இனிமை, கண் - இடம், தேறல் - மது, குன்றகம் - மலையிடத்து, சிறுகுடி - சிறுகுடி, கிளையுடன்-சுற்றத்துடனே எனவே நெடிய மூங்கிலரிசியி லுண்டாகச்சமைத்திட் டினிமைக்கிடமாகிய மதுவை மலையிடத்து சிறுகுடி சுற்றத்துடனே, மகிழ்ந்து - கூடவுண்டுகளித்து, தொண்டகச் சிறுபறைக்குரவையயர=குறிஞ்சி நிலத்தின்கண் தொண்டகமென்கிற சிறுபறையை ஆட எனவே குறிஞ்சிநிலத்துக் குரித்தாயதாய் சிறியபறையையுங் கொட்டிக்குரவைக் கூத்தையாடி குரவை என்றது கைகோத்தாடுங்கூத்து. இப்பெற்றிநோக்கி, 'குரவையாச்சிய ரோடு கோத்தது, மெனப் பெரியாரும் பணித்தமையானுமறிக. விரலுளர்ப்பவிழ்ந்த வேறுபடு நறுங்காற் குண்டு சுனைபூத்த வண்டுபடுகண்ணி = விரலுளர்ப்பவிழ்ந்த - விரலாலே அலர்த்தவலர்ந்த, வேறுபடு - பலவகைப்பட்ட, நறுங்கால் - நறுநாற்றத் தைப் பொருந்திய தாளினையுடைய, குண்டுசுனைபூத்த வண்டுபடுகண்ணி குவளைகள் விரலாலே யலர்த்த வலர்ந்தவண்டு தங்குகின்ற பூக்களை. இணைத்த கோதையணைத்த கூந்தல் = இணைத்த - தொடுத்த, கோதை - மாலை, அணைத்த கூந்தல் -

சேர்த்துள்ளகூந்தல் எனவே தொடுத்தமாலை சேர்த்தின கூந்தலினையுடைய. முடித்த குல்லையிலையுடை நறும்பூச் செங்கால் மராஅத்தவாலிணர் இடையிடுபு சுரும்புணத்தொடுத்த பெருந்தண் மாத்தழை = முடித்தகுல்லை - முடித்தாற்போன்ற கஞ்சம், இலையுடனறும்பூ - இலையுடனே நறுநாற்றத்தையுடைய பூ - செங்கான்மரா அத்த - சிவந்தகாம்பினையுடைய கடம்பு, வாலிணர் - வெள்ளைக் கொத்துப்பூ, இடையிடுபு, இடையிட்டு, சுரும்புணத்தொடுத்த - வண்டுபடியத்தொடுத்த, பெருந்தண்மாத்தழை - மிகவுந் தட்பம்பொருந்திய பெரிய தழை எனவே முடித்தாற்போன்ற கஞ்சக் குல்லையுடனே நறுநாற்றத்தையுடைய சிவந்த காம்பினையுடைய கடம்பின் வெள்ளைக்கொத்துப்பூ இடையிட்டு வண்டுபடியத்தொடுத்த மிகவுந் தட்பம் பொருந்திய தழையை, திருந்துகாழல் குல்திளைப்பவுடீஇ = அழகிய புடைவைபொருந்திய வல்குலிலே யசையவுடுத்து, மயில்கண்டன்னமடநடை மகளிரொடு = சாயலுடைமையால் மயில்கண்டாற்போன்ற மடப்பம் பொருந்திய வொழுக்கத்தையுடைய மகளிர் தழையையுடுத்து, செய்யன் சிவந்த வாடையன் - சிவந்த பரிவட்டத்தினை யுடையவன் செவ்வரைச்செயலைத் தண்டளிர் துயல்வருங்காதினன் = செவ்வரை - சிவந்தமலை, செயலை - அசோகு, தண்டளிர் - குளிர்ந்ததளிர், துயல்வரும் - அசைதரும், காதினன் - காதினையுடையான், கச்சினன் - கச்சைக் கட்டினவன். கழலினன் - திருக்கழலினையுடையான். செச்சைக்கண்ணியன் - வெட்சிமாலையை யுடையான் குழலன் - ஊதுகுழலினையுடையான். கோட்டன் - குறிக்குங் கொம்பினை யுடையான். குறும்பல்லியத்தன் - சிறியவாய பலவாச்சியங்களையுடையான். தகரன் - தகரக்கடாவினை யுடையான். மஞ்ஞையன் - மயிலினையுடையவன். புகரில் சேவலங்கொடியன் = புகர் - குற்றம், இல் - இல்லாத, சேவலங்கொடியன் - கோழி

க்கொடியோன் எனவே குற்றமில்லாத கோழிக்கொடியினை யுடையான். நெடியன் - உயர்ந்துள்ளோன். தொடியணி தோளன் - வளையணிந்த கையினையுடையவன், நரம்பார்த்த ன்னவின் குரற் றொகுதியொடு = யாழ் வாசித்தாற்போன்ற வினிதாகப்பாடுகின்ற கூட்டத்தோடே, குறும்பொறிக்கொண்ட நறுந்தண்சாயல் மருங்கிற்கட்டிய நிலநேர்புதுகிலின் = குறும்பொறி - சிறியபொறி, கொண்ட - பொருந்திய, நறு நாற்றம், தண் - குளிர்ச்சி, சாயல் - நிறம், மருங்கிற்கட்டிய - திருமருங்குலிலே சேர்த்திய, நிலநேர்புதுகிலினன் - இந்திர நீலத் திருப்பரிவட்டத்தினை யுடையவன். முழவுறழ்தடக்கையி னியலவேந்தி = முழவு = மத்தளம், உறழ் - ஒத்தல், தடக்கை பெரியகை, இகல்வேல் - மாறுபாட்டைச் செய்கின்றவேல், ஏந்தி - ஏந்திக்கொண்டு எனவே மத்தளமொத்த பெரியகையினாலே மாறுபாட்டைச் செய்கின்ற வேலையேந்திக் கொண்டு, மென்றோட் பல்பிணை தழீஇ = மெத்தென்ற தோளினையுடைய குறமகளிரையணைத்துக்கொண்டு, தலைதந்து - அவ்விடத்துவந்து, குன்றுதோறாடலு நின்றதன்பண்பே = மலையிடங்கடோறு முற்கூறிய குரவையாடுகிற விடங்களினும் நிற்றலு மவனியல்பான பண்பென்றவாறு - அஃதான்று - அதுவன்றியும்.

௬ ஆறாவது.

## பழமுதிர்சோலை.

சிறுதினை மலரொடு விரைஇமறி யறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
யூரூர் கொண்ட சீர்கெழு விழவினு
வேலன் றைஇய வெறியயர் களனுங்
காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங்கடம்பு

மன்றமும் பொதியினும் கந்துடைநிலையினு
மாண்டலைக் கொடியொடு மண்ணிய மைவர
நெய்யோ டையவி யப்பிஐய துரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவி னிரண்டுட னுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி.
மதவலி நிலைஇய மாத்தாட்கொழுவிடைக்
குருதியொடு விரைஇத் தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையுற வறுத்துத் தூங்கநாற்றி
நளிமலைச் சிலம்பி னன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி யாடி
இமிழிசை யருவியோ டின்னியங் கறங்க
வுருவப் பல்பூத்தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகிய நிறுத்தி முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுருகெழு வியனக
ராடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
யோடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
வாண்டாண் டுறைதலு மறிந்த வாறே
யாண்டாண் டாயினு மாகக் காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக்காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை

யைவரு ளொரு வனங்கை யேற்ப
வறுவர் பயந்த வாறமர் செல்வ
வால்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
விழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ
செருவி லொருவ பொருவிறன் மள்ள
வந்தணர் வெறுக்கை யறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
யரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையினர்க் கார்த்து மிசைபே ராள
வலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்
பரிசிலர்த் தாங்கு முருகெழு நெடுவேள்
பெரியோ ரேத்தும் பெரும்பெய ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசிலு மெனப்பல
யானறி யளவையி னேத்தியா னாது
நின்னளந் தறிதன் மன்னுயிர்க் கருமையி
னின்னடி யுள்ளி வந்தனெ னின்னொடு
புரையுந ரில்லாப் புலமை யோயெனக்
குறித்தது மொழியா வளவையிற் குறித்துடன்

வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
யளியன் றானே முதுவா யிரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
வினியவு நல்லவு நனிபல வேத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
யணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி
யஞ்ச லோம்புமதி யறிவனின் வரவென
வன்புடை நன்மொழி யளைஇ விளிவின்
றிருணிற முந்நீர் வளைஇய வுலகத்
தொருநீ யாகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசி னல்குமதி பலவுடன்
வேறுபஃ றுகிலி னுடங்கி யகில்சுமந்
தார முழுமுத லுருட்டி வேரற்
பூவுடை யலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரை பரிதியிற் றொடுத்த
தண்கமழ் மலரிறால் சிதைய நன்பல
வாசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமல ருதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுத
லிரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுத றுமியத் தாழை
யிளநீர் விழுக்குலை யுதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற

யடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை யிரியக் கேழலோ
டிரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயி ரியாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்
டாமா நல்லேறு சிலைப்பச் சேணின்
றிழுமென விழிதரு மருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

சிறுதினைமலரொடு விரைஇ=தூண்ணிய தினையரிசியைப் பூவுடனே கலந்துவைத்து, மறியறுத்து=ஆட்டின் மறியைக் கொன்று, வாரணக்கொடியொடு வயிர்ப்புடனிரீஇ=வாரணக் கொடியொடு - கோழிக்கொடியுடனே, வயிர்ப்புடன் - கொம் புடன் குறிக்க, நிரீஇ-நிறுத்தி, வயிற்பட எனப்பாடமுரைத்து ரை விரிப்பாருமுளர். ஊரூர் கொண்ட சீர்கெழுவிழவினும்= ஊர்கடோறுந் தானினைத்தகாரிய முடிப்பதற் கப்பிள்ளையா ரைநோக்கி யழகுபொருந்திய திருநாள் நடக்குமிடத்தினும், அடுக்குப்பன்மை. ஆரவலரேத்தமேவருநிலையினும் = ஆர்வல ரேத்தஒன்றுற் குறையுடையாரேத்த, மேவருநிலையினும்=மே விநிற்குமிடங்களினும், ஆர்வத்தைச்செய்யும் மக்களெனினு மமையும். வேலன்றைஇய வெறியயர்களனும்=வேலனிழை த்த வெறியாடுமிடங்களினும். பிள்ளையார் வேலைத்தனக்கடை யாளமாகவுடைய னாகலினவ்வனங் கூறினர். இது வெறி யறிசிறப்பின் வேலனெனப் புறத்திற்கூறியது. காடுங்காவுங் கவின்பெறுதுருத்தியும் = காடும்-காட்டிடத்தும், காவும்= பொழில்களிடங்களினும், கவின்பெறுதுருத்தியும்-அழகுபொ ருந்திய ஆற்றிடைக்குறைகளினும், ஆறும்-ஆறுகளினும், குள னும்-குளங்களினும் - வேறுபல்வைப்பும்-வேறுபட்டு பலவா யிருந்துள்ளவூர்களினும், சதுக்கமும்-நாற்சந்திகளினும்-சந்தி யும்-சந்திகளினும் புதுப்பூங்கடம்பும் -புதிதாகப் பூக்கப்பட்ட

கடம்புகளினிடத்தினும், மன்றமும் - ஊர்க்கு நடுவேயிருக்கு மரத்தடியினும், பொதியினும் - அம்பலங்களினும், பொதிய மலையென்பாருமுளர். கந்துடைநிலையினும் - யானைத்தறியி டத்தினும்; பசுமுதலான மிருகம் உறிஞ்சுதறியெனினுமமை யும். மாண்டலைக்கொடியொடு மண்ணியமைவர=மாண்டலை க்கொடியொடு - மாட்சிமைதலைப்பட்ட கோழிக்கொடியுட னே, மண்ணியமைவர - யாருடியமைவும் வரவும்பட்டு ஆண் டலைக் கொடியொடு மண்ணியமைவர என்றுபாடமாயின் மயிற்கொடியோடு விளங்கக்கண்டார்க்கு நிறைவரவெனினு மமையும். நெய்யோடையவியப்பி=நெய்யோடு - நெய்யுட னே, ஐயவி - சிறுகடுகு, அப்பி - நெற்றியிலேயப்பி, ஐதுரை த்து - சிறிது மந்திரங்களையுமோதி, குடந்தப்பட்டுக் கொழு மலர்சிதறி=கைகூப்பி நெஞ்சிலேவைத்து அழகிய மலரைத் தூவி, குடவென்பது குடந்தமெனநின்றதெனவுமது தடவெ ன்பதுபோல வளைவையுணர்த்து மோருரிச்சொல்லடியாகப் பிறந்த பெயருமாமெனவும், அது நால்விரன்முடக்கிப் பெரு விரனிறுத்தி நெஞ்சிடைவைப்பது குடந்தமாகும் எனவும் விரி ப்பாருமுளர் முரண்கொளுருவி னிரண்டுடனுடீஇ=தன்னில் மாறுவெண்பட்டையுமுடுத்து, செந்நூல்யாத்து=செந்நூலா லேகாப்புகட்டி, வெண்பொரிசிதறி - வெள்ளைப்பொரியைத் தூவி, மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைச்சுருதியொடு விரைஇய தூவெள்ளரிசி சில்பலிச்செய்து=மதம்-களி, வலி_ வலிமை, நிலைஇய-நிலைபெற்ற, மாத்தாள்-பெரியகால், கொழு விடை - யானைத்திரள், குருதி-உதிரம், ஒடு-உடனே. விரைஇ ய - கலந்து - தூவெள்ளரிசி - தூயதாயவெள்ளையரிசி, சில் பலிச்செய்து - பலபலிகளையுங்கொடுத்து எனவே மதத்தை யும் வலியையும் நிலைபெற்றுப் பெரியகாலினையுடைத்தாய யானைத்திரளையறுத்து உதிரத்துடனே தூய்தாய வெள்ளை யரிசிகலந்து பலபலிகளையுங்கொடுத்து, பல்பிரப்பிரீஇ - பல

பிரப்பாக முலைப்பட்டமெழுதி. சிறுபசுமஞ்சளொடு ந
விரைதெளிந்து = சிறிய பசுமையுடைத்தான காட்டுமஞ்
ளுடன் நல்ல மும்மலர்களையுந்தூவி, பெருந்தண்கணவீர ந
ந்தண்மாலை - துணையுறவறுத்துத்தூங்கநாற்றி=பெருந்தண்-பெ
ரியகுளிர்ச்சியினையுடைய கணவீரம்-செவ்வலரிப்பூ, நறுந்த
மாலை - நறுவிய தட்பம்பொருந்தியமாலை, துணையுறவறுத்து
இணையொக்க நறுக்கி, தூங்கநாற்றி - அசைதரப் பூங்கோ
கத்தூக்கி எனவே பெரிய குளிர்ச்சியினையுடைய செவ்வல
ப்பூ நறுவிய தட்பம்பொருந்திய மாலையை இணையொக்க ந
க்கி அசைதரப் பூங்கோயிலாகத்தூக்கி, களிமலைச்சிலம்பின
னகர்வாழ்த்தி = குளிர்ச்சி யுடைத்தாயிருந்துள்ள மலையி
த்து நல்லவூர்களைவாழ்த்தி, நறும்புகையெடுத்து = நறுநா
றத்தையுடைய தூபத்தையெழுப்பி, குறிஞ்சிபாடி=அந்நில
துக்குரிய குறிஞ்சியென்கின்ற பண்ணைப்பாடி. இமிழிசை
யருவியோடின்னியங்கறங்க=மலையினின்று விழுகின்ற மெ
தென்ற வருவியோசையுடனே இனிதாய வாச்சியங்களொ
ப்பமுழங்க, உருவப்பல்பூத்தூஉய்=பல நிறங்களையுடைய பூ
க்களைச்சிதறி, வெருவர = கண்டார் திடுக்கென, குருதிச்செ
நினைபரப்பி = உதிரம்போன்ற செந்தினைகளைப்பரப்பி, கு
மகள் முருகியநிறுத்து = குறமகளிர் முருகனுக்குடை
யாகிய முருகிய மென்றதுடியையுங்கொட்டி, முருகியந்தொ
ண்டகம்பறையெனினுமமையும். முரணினருட்க = தங்களுட
ன் மாறுபாட்டோரஞ்சும்படி. முருகாற்றுப்படுத்த = பிள்ளை
யானைத் தங்கள் வழிப்படுத்தின, உருகெழுவியனகர்=அழ
மைந்துள்ள வூர்களிலே, ஆடுகளஞ்சிலம்பப்பாடி=வெறியாட்
டாளர்கள் ஆரவாரிக்கப்பாடி, பலவுடன் கோடுவாய்வைத்து=
பலமுழக்கத்துடனே கொம்புகுறித்து, பலமுழக்கத்துடனே
சங்குகுறித்ததெனினு மமையும். கொடுமணியியக்கி=ஒலி
மிக்க மணிகளையுமெறிந்து, ஓடாப்பூட்கைப் பிணிமுகம் வ

த்தி = கெடாத வலிமைபடைத்த பிணிமுகமென்னும்பெ ருடைய யானையைப்பரவி, பிணிமுகமென்பது பிள்ளையார் வனிவரும் யானையின்பெயர்; இதனைச் 'சேயுயர்பிணிமுக ஊர்ந்த' எனப்பரிபாடலினும்; 'பிணிமுகமஞ்ஞைசெருமுகத் தந்திய' வெனக்கல்லாடத்தும் கூறலானுமறிக. பிணிமுக மயிலென்பாரு முளர். வேண்டினர் வேண்டியாங்கெய்தி னர் வழிபட=வேண்டினோர் வேண்டின வரங்களைப் பெறவே ண்டுமென்று வழிபட, ஆண்டாண்டுறைதலு மறிந்தவாறே= முதற் கூறப்பட்ட வவ்வவ்விடங்களிலே தங்குதலுமறிந்த வாறே, ஆண்டாண்டாயினும் = அங்கங்கேயாயினும், ஆகக்கா ண்டக= ஆகிக்கண்டவிடத்திலே, முந்துநீகண்டுழி-முந்துநீக ண்டவிடத்தே, முகனமர்ந்தேத்தி=முகமலர்ந்து வாழ்த்தி, கை தொழூ உப்பரவி=கைகூப்பித்துதித்து, காலுறவணங்கி=சிபா தத்திலே விழைவுற்று வணங்கி, நெடும்பெருஞ் சிமயத்து நீலப்பைஞ்சுனையைவரிலொரு வனங்கை யேற்பவறுவர் பயந்த வாறமர்செல்வ=நெடும்பெருஞ் சிமயத்து-ஓங்கிய பெரிய வரையகத்து, நீலப்பைஞ்சுனை - நீலோற்பல முதலாயுள்ள பூக்கள் மிடைந்துகிடக்கின்ற சரவணப்பொய்கையில் 'இம யம் பூத்தசுனைமாண்டொட்டி' என்றார்கல்லாடரும். ஐவரு ளொருவன்-பிருதிவி-அப்பு-தேயு-வாயு-ஆகாயம்என்னப்பட்ட பஞ்சபூதங்களினொருவனாகிய அனற்கடவுள், அங்கையேற்ப- அழகியகையையேற்ப, அறுவர்பயந்த - அருந்ததி யொழிந்த அறுவராலும் பெறப்பட்ட, ஆறமர்செல்வ - நெறியினமர்ந்த செல்வனே, எனவே ஓங்கிய இமயவரையகத்து நீலோற்பல முதலாயுள்ள பூக்கள்மிடைந்து கிடக்கின்ற சரவணப்பொய் கையிலே பஞ்சபூதத் தொருவனாகிய அனற்கடவு ளழகிய கையை யேற்ப அருந்ததியொழிந்த வறுவராலும் பெறப் பட்ட நெறியமர்ந்த செல்வனே அறுவர் பயந்தவென்றது கார்த்திகை முதலாயுள்ள அறுவருமுலை கொடுத்து வளர்த்த

வனே யெனினு மமையும். நீலமென்ற நீண்டையாகுபெயராக க்கொண்டுதருப்பையெனினுமாம். 'இநீனப்பாயிரும் பனிக்கடலென்னும் பரிபாடலானுமறிக. ஆல்கெழு கடவுட் புதல்வ= ஆலின் கீழே பொருந்திய இறைவன் குமாரனே மால்வரை மலைமகன் மகனே = மால்போலு வரையினையுடைய ம'ஃ யரையன் திருமகளார்மகனே, மாற்றோர்கூற்றே=சேரலாது குக் கூற்றுவனே, வெற்றிவேல் போர்க்கொற்றவை சிறுவ யி வெற்றியுடைத்தான வேற்போர்க்குரிய துர்க்கையினுடைய புதல்வனே, வென்றவெற்றிப் போருக்குத்தெய்வமானசெய மகளார் புதல்வனே எனினு மமையும், இதுமகிடனைச் செற்ற மையுணர்த்திற்று.' இழையணிசிறப்பிற் பழையோள் குழவி= பூணணிந்த சிறப்பினையுடைய காடுகாள் மகனே இதுவன் திப் பூமாதேவிக்குப்பிள்ளையென்பாருமுளர். வானோர் வணங்கு விற்றானைத்தலைவ=தேவர்கள் வணங்கப்படும் சேனாபதியாயுள்ளானே, இது தேவர்சேனாபதியென்னும் பெயர்ப்படுத்திக் கூறினதெனினு மமையும். மாலைமார்ப=மாலையமர்ந்த திருமார்பனே, நூலறிபுலவ - வேதாகமங்கள் முதலிய பல சாத்திரங்களையு மோதாதுணர்த்தும் பண்டிதனே, செருவிலொருவ=போருக்கொருவனே, பொருவிறன் மள்ள=வீரராயிருப்பார்க்கு வீரனாயுள்ளவனே. அந்தணர் வெறுக்கை= அந்தணருக்குத் திரவியமே, அறிந்தோர் சொன்மலை=அறிந்தோராலே சொல்லப்பட்ட சொல்லுக்கு மிகுதியாயுள்ளவனே, மங்கையர்கணவ = மங்கையரிருவருக்குங் கணவனே அவர் வள்ளிநாயகியார் தெய்வயானையாரென்க. மைந்தரேறே = வீரர்க்கேறாயுள்ளவனே, வேல்கெழுதடக்கைச் சால் பெருஞ்செல்வ=வேல் ஏந்திய பெரியகையினையுடைய மிகுதிபட்ட பெருஞ்செல்வனே, குன்றங்கொன்ற குன்றாக் கொற்றத் தவிண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக்கிழவ = குன்றங் கொன்ற - குருகுபெயர்புனைந்த மலையைப் பிளந்த, குன்றா

கோற்றத்து-குறையாத வெற்றியினையுடைய, இதனைப் 'புள்ளியற்பொருப்பு மென்றதனுநுமுணர்க. விண்பொரு நெடுவரைக்குறிஞ்சிக். கிழவ = ஆகாயத்தைத் தொடுவதுபோன்றுயர்ந்த மூங்கிலடர்ந்தகுறிஞ்சி நிலத்துக்குத் தலைவனே, சேயோன் மெய்வரையுலகமு'மென்றதிப்பெற்றிநோக்கி.பலர்புகழ் நன்மொழிப்புலவரேறே = பத்தர்களா லேத்தப்பட்ட நல்லசொற்களை யுடையபுலவர்க்கேறு யுள்ளவனே, அரும்பெறன் மரபிற்பெரும் பெயர்முருக = பெறுதற்கரிய முறைமையினையுடைய முருகனென்னும் பெயரினையுடையவனே, நசையினர்க்காத்து மிசைபேராள = நச்சிவந்தார்க் காரவாரம்பண்ணும் புகழினையுடைய பேராளனே, அலந்தோர்க்களிக்கும் பொலம் பூட்சேஎய் = தரித்திரராயுள்ளோர்க் கருளும்பொற்பூணையுடைய சேயே, மண்டமர் கடந்தநின்வென்றாடகலத்து=மண்டின அனுமானித்துவென்ற வெற்றியினையுடைய மார்பனே, பரிசிலர்த்தாங்கு முருகெழுநெடுவேள் = இறப்போகாத் திருக்கைகளாலே தாங்குகின்ற அழகிய தவமிக்கவனே, பெரியோரேத்தும் பெரும்பெயரியவுள் = உயர்ந்தோரா லேத்தப்பட்ட பெரியநாமத்தைவுடையகடவுளே, சூரமருங்கறுத்தமொய்ம்பின் மதவலி = சூரபன்மனைச் சுற்றக்குழாத்துடனே வேரறுத்தவலியையும் உறுதியையு முடையானே, போர் மிகுபொருநகுரிசிலுமெனப்பல - போரைமிகப்பொரவல்லவனே தலைவனே யெனவும் பலவாக. யானறியளவையினேத்தி = என்னாலறிந்த வெல்லைகளிலே வாழ்த்தி, ஆனாது=அமையாது - நின்னளந்தறிதன் மன்னுயிர்க் கருமையின் = நின்பெருமை யளந்தறிதலுலகங்களிலே மன்னப்பட்ட உயிர்களுக்கருமையாதலாலே, நின்னடியுள்ளி வந்தனன் = நின்னுடைய திருவடியை நினைந்துவந்தேன், நின்னொடுபுரையுந ரில்லாப்புலமையோயென = நின்னோடொப்புமை இல்லாத புலமையுடையோ யென்று,

குறித்தது மொழியாவளவையின் = நினைத்தது மொழிவதற்கு முன்னர், குறித்துடன் = குறித்துக்கொண்டே. குறும்பல் கூளியர் = நினைத்த காரியமின்ன தென்றறிந்தொன்றற்கொன்று வேறுபட்ட பலவுருவினை யுடையவாய், குறிதாயிருப்பன பலபூதங்கள் கூளிகளென்று பேய்க்கும்பெயராம். சாறயர் களத்து வீறுபெறத்தோன்றி = விழாக்களத்தின் வீறுண்டாகத்தோன்றி, கூளியர்பிள்ளையார்க்கு நின்வரவு சொல்லுவார், அளியன்றானே = நீயனுக்கிரகிக்கத்தக்கவன்றானே முதுவாயிரவலன் = நிரம்பவோதிய புலவன், பெரும நின்வண்புகழ் நயந்து = பெருமானே, நினது வளவிய புகழை விரும்பி இனியவு நல்லவு நனிபலவேத்தி வந்தோனென = கேட்பார்க்கு இனிதாகவும் பயனுண்டாகவும்வருநன்மைபலவுஞ் சொல்லி மிகவாழ்த்தி வந்தானென்றுகூற, தெய்வஞ் சான்றதிறல் விளங்குருவின் வான்றோய் நிவப்பிற்றான்வந்தெய்தி = தெய்வத்தன்மை யமைந்த வலிவிளங்கப்பட்டபடியினையும் வானிலே தோன்றப்படுகின்ற ஒழுக்கத்தினையுமுடைய பிள்ளையாரு முன்பு கிட்டிவந்து, அணங்குசாலுயர்நிலை தழீஇ = தெய்வத்தொழிலமைந்து மிக்குயர்ந்த நிலை தன்னிடத்தே யடக்கிக்கொண்டு, பண்டைத்தன் மணங்கமழ் தெய்வத்திளநலங்காட்டி = பண்டைத்தனது மணங்கமழ்கின்ற முருகனாகிய தனதுதெய்வ நலத்தைக்காட்டி = தெய்வத்தன்மை யடக்கி; மக்களியாக்கை யுடையார் தெய்வயாக்கையைக் கண்டால் நடுங்குவாராதலான் மக்களி யாக்கையைக்கொண்டு இளையனாகத்தோன்றி, அஞ்சல் = அஞ்சாதை ஓம்பும் = ஒப்பம் பெற்று. மதி - அசை நிலை அறிவனின்வரவென = அறிந்தேன் நீகருதிவந்த பொருளெனத் திருவுள்ளமாய் அன்புடை நன்மொழியளைஇ = அன்புடனே நல்லபொருள்களை யவனுடனே கலந்துபேசி, அன்புடனே நல்லமொழியாலே யவனுடனே யளவளாயின வெனினு மமையும்.

ருவின்றிருவளர முந்நீர்வளைஇய வுலகத்தொரு நீயாகத் தோன்ற = கேடின்றி யிருந்த கரிய நிறத்தினையுடைய முந்நீர் சூழ்ந்த பூமிக்கு நீயொருவனே தலைவனாகக்காணும் படியாக, மதிபலவுடன் விழுமிய பெறலரும் பரிசினல்கும் = அறிவுகள் பலவுடனே மேம்பட்டபெறுதற்கரிய பரிசில்களை யளித்தருளுவன். வேறுபஃறுகிலினுடங்கி = வேறுபடவுடுத் துகிலினுடங்கல போன்று, அகில் சுமந்து = அகில்மரத்தை யெடுத்துக்கொண்டு, ஆரமுழுமுதலுருட்டி வேரல = வேரோடே சந்தனமரங்களை யெடுத்துருட்டி, பூவுடையலங்குசினை புலம்பவேர் கீண்டு = அழகிய நீலோற்பல முதலிய பூக்களுமிடைந்து கிடக்கின்ற சினைகளின் மரங்களெல்லாம் வேர்கிழித்துக்கொண்டு, விண்பொருநெடுவரை பருதியிற் றொடுத்த தண்கமழ் மலரிறால் சிதைஇய = ஆகாயத்தைத்தொடுவது போன்றிருந்துள்ள பெரிய மலைகளில் ஆதித்தன் தோன்றினாற் போல வைத்துக்குளிர்ச்சியையும் நறுநாற்றத்தையு முடைய தேன் கூடுகளெல்லாமழிய, நன்பலவாசினி முதுசுளைகலாவ = நல்லபலாவின் முற்ற மற்ற சுளையும் விரவிக்கொண்டு, மீமிசை நாகநறுமலருதிர = மேன்மேலே புன்னையினுடைய நறுவிய மலர்களையுதிர, யூகமொடு மாமுக முசுக்கலைபனிப்ப = கருங் குரங்குகளுடனேபெரியமுகத்தினையுமுடைய முசுக்களுங்கலைகளுந்தளர. மீமிசைஒருபொருட்பன்மொழி. பூநுதலிரும் பிடிகுளிர்ப்பவீசி - பொலிவுபெற்ற மத்தகத்தையுடைய பிடிகளுள்ளங்குளிரும்படி தள்ளி, பெருங்களிற்று முத்துடை வான்கோடு தழீஇத்தத்துற்று = பெரியகடாயானைகளின் முத்துச்சொரியுங் கோடுகளையுமணைத்துக்கொண்டு குதிபாய்ந்து, நன்பொன்மணி நிறங்கிளர = நல்ல பொன்னும் மாணிக்கமு மொக்க வொளிபெற, பொன்கொழியா = பொன்னைக்கொழித்து, வாழை முழுமுதறுமிய = வாழைகளை வேருடனே முறித்து, தாழை யிள

நீர் விழுக்குலையுதிரத்தாக்கி=தென்னமரங்களின் நல்ல இள நீரின்சிறந்த குலை யுதிரச்சாடி, கறிக்கொடிக்கருந்துணர் சாய =மிளகுகொடிகள் பூவுடனே சரிய. பொறிப்புறமடநடை மஞ்ஞை பலவுடன்-பலவரிகளையும் மடப்பத்தினையும் நடையினையுமுடைய மயில்கள் பலவுடன், கோழிவயப் பெடை வெரீஇயிரிய=கோழியின்வலியையுடைய பெடைகளுமோட. கேழலொடு-பன்றிகளுடனே, இரும்பனை வெளிற்றின்-பெரிய இளம்பனையின், புன்சாயன்ன-வலியசெறும்புபோன்ற, குரூஉமயிரியாக்கை - கருநிற மயிரினையுடையவுடம்பினையும்-குடாவடி-குடமுழவுபோன்றவடியினையுமுடைய, உளியம்-கரடி, பெருங்கல்விடறளை - பெருங்கல்வின்ட முழையில், செறிய - சேர, பன்றிகளுடனே கருங் கோட்டாமா நல்லேறு சிலைப்ப = கரியகொம்பினையுடைய வமாவினுடைய நன்றாகிய ஏறுகள்முழங்க, சேணின்றிழுமெனவிழிதரு மருவிப் பழமுதிர்சோலை மலைகிழவோனே=மலையினுச்சியினின்று இழுமென்னுமோசையுடன் குதித்துவருமருவியாற்றையுடைய பழமுதிரும் சோலை மலைக்குரிமையுடையானே—எ-று. முருகாற்றுப்படை யென்பதற்குச்சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாய வந்தமிலின்பத்தழிவில் வீடுபெறுவான்சமைந்தானோரிரவலனையவ்வாறு 'வீடுபெற்ற' ஒருவன் முருகனுழையாற்றுப்படுத்தலெனப்பொருள்விரிக்க.

நேரிசைவெண்பா.

அரிமேலழகுறாஉமன்பமைநெஞ்சப்
பரிமேலழகன்பகர்ந்தான்—விரிவுரைமு
தக்கீரிஞ்ஞான்று தனிமுருகாற்றுப்படையா
நக்கீர னல்லகவிக்கு.

திருமுருகாற்றுப்படைக்கு
உரையாளர் பரிமேலழகருரை
முற்றிற்று.